[illegible] 1926-26

[illegible]

SL
R65m21, N11ND
N26·16·10·
186762

Regd. No. M. 816.

THE VEDANTA DIPIKA

வேதாந்த தீபிகை.

அக்ஷய ௵,
1925—1926.
ஸம்புடம் 16.

ஆடி ௴
JULY
ஸஞ்சிகை 10

பத்ராதிபர். }
கார்யதர்சி. } ர. [illegible] அய்யங்கார், எம்.ஏ.

விஷய ஸூசிகை.

1. ஆத்ம குணங்கள்.—ஸ்ரீ. உப. வே. காடந்தேத்தி கோபாலாசார்யர். 193
2. சமயம்.—ஸ்ரீமான்- திரு. அ. இராமகிருஷ்ணசடகோபதாசர். 201
3. வால்மீகியும் கம்பரும்.—
ஸ்ரீ. உப. வே. வி. ர. குப்புஸாமி அய்யங்கார். 205
4. ஸ்திரீகளின் ஆஹ்நிக தர்மங்கள்.—
ஸ்ரீ. உப. வே. பார்த்தஸாரதி அய்யங்கார். 209
5. போக்த்ராபத்யதிகரணம்.—
ஸ்ரீ. உப. வே. அன்பில் கோபாலாசார்யர், எம். ஏ; பி. எல். 213
6. பத்ராதிபரின் குறிப்புகள்,—
மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் ஸ்வாமி.
கீர்வாணபாஷாப்யுதயம். 217
7. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம் (தமிழ் மொழிபெயர்ப்புடன்)—
ஸ்ரீ. உப. வே. மஹாமஹோபாத்யாய சே. நரஸிம்மாசார்யர். 1
8. ஸ்ரீபரமபத ஸோபாநம் (வ்யாக்யானத்துடன்):—
ஸ்ரீ. உப. வே. மஹாமஹோபாத்யாய. சே. நரஸிம்மாசார்யர். 145

Office:—2/11, Adiappa Mudaly Street, Purasawalkam
K. R. Press, Madras.

வர்ஷச் சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 6.

பாதி விலை! **ஒரு மாதம் வரை** பாதி விலை!!



அசல் விலை ரூ 14.

பாதி விலை ரூ. 7.

22-காரட். ரோல்டு கோல்டு கை கெடியாரம். 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும், இக்கெடியாரங்களில் எம்மாதிரிஷேப் ஆனபோதிலும் ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பிவைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ், தபால்பெட்டி, நெ. 508,
பி. டி. மதராஸ்.

இனாம்! இனாம்!!





இச்சமயம் தவராதீர்கள்!!

சில நாளைக்கு மாத்திரம்!!

உலகமெங்கும் ப்ரஸித்திபெற்ற தாராலீவர் ளைக்கட் லீவர் கடியாரம் விலை ரூ. 5-0-0 உள்ளது. உள் டையலின்மேல் ஐந்துவருஷம் உத்திரவாதம். காலத்திற்கு சரியான மணியை காட்டக்கூடியது. இக்கடியாரத்தை ஆர்டர் செய்கிறவர்களுக்கு ஒரு "C" டைம்பீஸ் இனாமாகக்கொடுக்கப்படும். இச்சமயம் தவறாதீர்கள். சில நாளைக்கு மாத்திரம். கடியாரம் ஒன்றுக்கு விலை ரூ. 5-0-0 முந்துங்கள்.

விலாசம்:— காப்டன் வாச் கம்பெனி,
தபால்பெட்டி 265 மதராஸ்.

ஸ்ரீ:.

ஸ்ரீ [illegible]

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்
காரியதரிசி } ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.

ஸம்புடம் 16.] அக்ஷய வருஷம், ஆடி மீ [ஸஞ்சிகை 10.

[illegible]

[illegible]

[ஸ்ரீ[illegible] 1-8-28.

ஸ்ரீ:.

ஆத்ம குணங்கள்

(ஸ்ரீ. உ.ப. வே. காடந்தேத்தி கோபாலாசார்யர்.)

கீழ் ப்ராஹ்மண்யம் எப்படி ஒருவனுக்கு ஸித்திக்குமென்னும் விஷயத்தில் கர்பாதானம் முதலிய நாற்பது ஸம்ஸ்காரங்கள் ஆவச்யகமென்றும், ப்ராஹ்ம ஸம்ஸ்காரங்கள் தைவ ஸம்ஸ்காரங்கள் என்கிற பேதத்தினால் அவை இரண்டு வகை என்றும், கர்ப்பாதானம் முதலியது ப்ராஹ்ம ஸம்ஸ்காரங்கள், பாகயஜ்ஞம் முதலியவை தைவங்களென்றும், இவ்விதம் வேதாத்யயநத்தாலும் மதுமாம்ஸம் முதலியவைகளை விலக்குதல் என்கிற நியமத்தாலும், அக்நிஹோத்ரம் முதலிய ஹோமங்களாலும், த்ரைவித்யா முதலிய வ்ரதானுஷ்டானங்களாலும், ப்ரஹ்மசாரியாக இருந்து தேவர்ஷி பித்ரு தர்ப்பணங்களைச் செய்தும், க்ருஹஸ்தாச்ரமத்தில் ப்ரஜோத்பாதனத்தாலும், ப்ருஹ்மயஜ்ஞம் முதலிய பஞ்சமஹா யஜ்ஞங்களினாலும், ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகாநுஷ்டானத்தினாலும், தன் சரீரத்தை ப்ருஹ்மப்ராப்திக்கு யோக்யமுள்ள ஆத்மாவாஸம் பண்ணக்கூடியதாகச்

184262

செய்துகொள்ளுகிறுன் என்றும், அவைகளினுல் பீஜத்தினுலும் கர்ப்ப வாஸத்தினுலும் உண்டாகிய தோஷங்கள் நசிக்கின்றன என்றும், அந்த ஸம்ஸ்காரங்களில் உபநயநம் ப்ரதானம் என்றும் இந்தத் தீபிகையின் 16 ஸம்புடம் 2, 3-வது ஸஞ்சிகைகளில் "உபநயநம்" என்கிற தலைப்பெயருடன் கூடிய வ்யாஸம் எழுதி நின்றது.

இனி இந்த ஸம்ஸ்காரங்களைவிட ஆந்தரங்களான ஆத்ம குணங்கள் ஆவச்யகமாகையால் அவை இங்கு நிரூபிக்கிக்கப்படுகின்றன. இந்தவிஷயத்தைப்பற்றி கௌதமர் "யஸ்யைதே சத்வாரிம்சத் ஸம்ஸ்காரா: ந சாஷ்டாவாத்மகுணா: । ந ஸ ப்ரஹ்மண: ஸாயுஜ்யம் ஸாலோக்யம் ச கச்சதி । யஸ்ய து கலு ஸம்ஸ்காராணாமேகதேசோப்யஷ்டாவாத்மகுணா: அத ஸ ப்ரஹ்மண: ஸாயுஜ்யம் ஸாலோக்யம் ச கச்சதி"॥ என்னும் இரண்டு ஸூத்ரங்களால் கர்பாதானம் முதலான நாற்பது ஸம்ஸ்காரங்கள் பூர்ணமாக விருந்தாலும், இந்த எட்டு ஆத்ம குணங்களில்லாமல்போனுல் ப்ருஹ்ம ப்ராப்தி கிட்டாது என்றும், எவனுக்கு நாற்பது ஸம்ஸ்காரங்களில் த்விஜத்வ மூல ஸம்ஸ்காரங்களின் ஏகதேச ஸம்பந்தமிருந்தாலும் எட்டு ஆத்ம குணங்களிருக்குமாயின் அவன் ப்ருஹ்ம ஸாலோக்யத்தையும் ஸாயுஜ்யத்தையும் அடைவான் என்றும் அருளிச்செய்திருக்கிறுர். இதனுல் சரீர ஸம்பந்தங்களான ஸம்ஸ்காரங்களைவிட ஆந்தரங்களான ஆத்ம குணங்கள் ப்ரதானமென்று ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது. ஆகையால் ஆத்மகுணங்களை நிரூபிப்பது முக்யமென்று ஏற்படுகிறது.

அந்த ஆத்ம குணங்கள் எவை என்றுல், அவைகளையும் கௌதமரே அடியில்கண்ட ஸூத்ரத்தினுல் நிரூபித்திருக்கிறுர். "அதாஷ்டாவாத்மகுணா:-தயா ஸர்வபூதேஷு, க்ஷாந்தி:, அநஸூயா, சௌசம், அநாயாஸ:, மங்களம், அகார்ப்பண்யம், அஸ்ப்ருஹா, இதி" (1) ஸர்வ பூதங்களிடமும் தயை, (2) க்ஷமை, (3) அஸூயை இல்லாமை, (4) சுசியாயிருக்குந் தன்மை, (5) ஆயாஸமில்லாமை, (6) மங்களம், (7) பேராசை, (8) பிறர் சொத்துக்கு ஆசைப்படாதிருக்கும் தன்மை, ஆகிய இந்த எட்டு குணங்களின் ஸ்வரூபங்களை ப்ருஹஸ்பதி தம்முடைய ஸ்ம்ருதியில் அடியில்கண்டவாறு நிரூபித்திருக்கிறுர்.

தயை :—

பரோ வா பந்துவர்க்கே வா மித்ரே த்வேஷ்டரி வா ஸதா ।
ஆபந்நரக்ஷணம் யத்து ஸா தயா பரிகீர்த்திதா ॥

சத்ருவினிடத்திலும், பந்துவர்க்கத்தினிடத்திலும், நண்பனிடத்திலும், த்வேஷிப்பவனிடத்திலும் கோபித்துக்கொள்ளாமல் ஸொந்தப்ரயோஜனத்தையும் எதிர்பாராமல் அயலாருடைய துக்கத்தைப் போக்குவதில் இச்சைக்கு தயை என்று பெயர். இதை "பரது:க ஸ்வாபாவிகீஷா ஸ்வஹித நைரபேக்ஷ்யேண ஸைவ தயாநுகம்பா" என்று ஸ்ரீமன் நிகமாந்த மஹா தேசிகன் ஸாதித்திருக்கிறுர். பரது:க து:கித்வம் அதாவது அயலாருடைய துக்கத்தைப் பார்த்து தானும் துயரப்படுவது என்பது தயை என்று ஸ்ரீ பிள்ளை லோகாசார்யருடைய பக்ஷம். வேதார்த்தஸங்க்ரஹருடைய பக்ஷமே பாஷ்ய ஸம்மதமாய்த் தோற்றுகிறது. மாகம், நைஷதம் முதலான காவ்யங்களும் அவைகளின் வ்யாக்யானம் செய்தவர்களும் அப்படியே அருதியிட்டார்கள். மேலும் ஒருவன் துயரமடைந்தானுகில் இடர்தீர்க்க வல்ல மற்றொருவன் அவனைத் தேற்றி அவன் துயரத்தைப் போக்கினுலன்றோ அவனை தயாளுவென்றும், அப்படியன்றிக்கே துக்கப்படுகிறவனுடன் வாசியறத் தானும் துயருற்றுனுகில் துயரடைந்தவன் கதி என்ன? மேலும் இவன் துக்கமடைவதைக் கண்டு தான் அசக்தனுனதால் தானும் பின்னும் துக்கமடையவேண்டி வரும். இதை லோகானுபவத்தில் பார்க்கலாம். ஸர்வசக்தனுன எம்பெருமான் ஒருவனுடைய துக்கத்தைக் கண்டு தானும் துக்கப்படுவான் என்றுல் அவன் ஸ்வரூபத்தில் ஹேயப்ரத்யநீகதை குலைந்து துக்காச்ரயத்வரூப தோஷம் ஸம்பவித்து அவனும் சேதநனைப்போலே ஒருவருக்கும் நன்மை செய்ய வல்லமையற்று ஸம்ஸாரியாகவும் ப்ரஸங்கிக்கும். ஔபாதிகமாகில் ப்ரயோஜனமில்லை. ஆகையால் பரது:கைவ நிராசிகீர்ஷயா (பிறர் துக்கத்தை நிவ்ருத்தி செய்வதுதான் தயை) என்று சொல்லவேண்டும். இப்பேர்க்கொத்த தயை ஆத்ம குணங்களில் ப்ரதானமாதலால் மற்ற குணங்களுக்கு முன்னே எடுக்கப்பட்டது. இவ்விஷயத்தில் ஓர் ஐதிஹ்யமுண்டு. ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் நஞ்ஜீயர் காலக்ஷேப கோஷ்டியில் ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணத்தை எது என்று வினவ, ஒருவனுக்கு வைஷ்ணவத்வம் உண்டென்பதும் இல்லை என்பதும் தனக்கே தெரியுங் காண், என்று பலகாலும் அருளிச் செய்வர். பிறர் துயரப்படும்பொழுது ஐய்யோவென்றிந்தானுகில் நமக்கு பகவத் ஸம்பந்தம் உண்டென்று சொல்லத்தகும், இத்தனையும் இவனுக்கு வேண்டுமென்றிருந்தானுகில் அவனுக்கு பகவத் ஸம்பந்தமில்லை என்று சொல்லத்தகும்.

ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம: (க்ருபைதான் உயர்ந்த தர்மம்) என்று பிராட்டி அருளிச் செய்த வார்த்தை. இந்த தயை இல்லாமல் ஜ்ஞான சக்தி முதலிய குணங்களிருந்தாலும் உபயோகமில்லை. ஜ்ஞானம் பிறரின் தோ

ஷத்தை அறிவதற்கு சக்தி, தோஷத்தை அறிந்து அந்தப்படி சிக்ஷிக்க உபயோகப்படுவதே ஒழிய வேறில்லை. தயை என்னும் குணமிருந்தால் தோஷத்தைத் தள்ளி குணத்தை க்ரஹித்து ரக்ஷிக்கத்தகுந்த அவனுடைய ஸ்வரூபத்தையும் அவன் ச்ரம விசேஷத்தையுமறிந்து, அதை நிவ்ருத்திக்கும் உபாயத்தை யறிந்துகொள்வதாலும், அவன் சக்தி அவன் துயரத்தைப் போக்கடிப்பதில் உபயோகமாவதாலும் தயை தான் மற்ற குணங்களைப் போஷித்து நிற்பதால் உத்க்ருஷ்டம் என்று தோன்றும்படி ஸர்வ பூத தயையை முதல் குணமாக எடுத்தார். ஸர்வபூத தயாத்யஷ்டம் க்ஷாந்த்யஷ்டம் விசேஷத: என்று உபாதான ப்ரகரணத்தில் தயையையும் க்ஷாந்தியையும் ஆந்தர பூஜோபகரணமாக எடுத்தாரிறே.

க்ஷாந்தி: (பொறுமை)

பாஹ்யே சாத்யாத்மிகே சைவ து:கே சோத்பாதிதே பரை:।
ந குப்யதி ந வா ஹந்தி ஸா க்ஷமா பரிகீர்த்திதா॥

அயலார்கள் பாஹ்யமானதும் ஆந்தரமானதுமான துக்கங்களை உண்டு பண்ணும்போதும் அவர்களிடத்தில் விகாரத்தை அடையாமல் கோபத்தைத் தடுத்துக்கொண்டிருப்பது பொருமை என்று பெயர். இவ்விதப் பொருமை இருந்தால் கவசம் வேறுவேண்டாம். க்ஷமாஸாரா ஹி ஸாதவ: என்னும்படி மஹான்களுக்கு இதோர் அணியாகவிருக்கும். இதனால் தர்ம புத்ரர் முதலிய சில மஹான்கள் க்யாதியடைந்தார்கள். இந்தப் பொருமையானது ஸர்வ தர்மங்களையும் ஸாதித்துக் கொடுக்கும் என்பது க்ஷமயா விஷ்டிதம் ஜகத் என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் கொண்டாடப்பட்டிருக்கிறது. அபகாரம் செய்தவர்களிடத்தில் மாத்திரம் ஸாதுவாக இருப்பது க்ஷமை என்று சொல்ல முடியாது. அபகாரிகளிடத்திலும் அவர்களுடைய அபகாரத்திற்கு ப்ரதீகாரம் செய்ய வல்லமை இருக்கும்போதும் பொருமைதான் க்ஷமையாகும். க்ஷமாசக்தன் என்றான் காளிதாஸன். இந்த குணத்தை அம்பரீஷன் தன் வ்யாபாரத்தால் உலகத்துக்கு வெளியிட்டார்.

அஹோ அநந்ததாஸாநாம் மஹத்த்வம் த்ருஷ்டமத்ய மே।
க்ருதாகஸோऽபி யத்ராஜந் மங்களாநி ஸமீஹஸே॥

'ஆச்சர்யம்' பகவத் பக்தர்களின் மஹிமையை இப்போதுதான் பார்த்தேன். ஏனெனில் அபராதம் செய்த எனக்கு நீர் க்ஷேமத்தை விரும்புகிறீர்" என்று துர்வாஸஸ் அம்பரீஷனுடைய க்ஷமாகுணத்தை ப்ரசம்ஸித்தார். இப்படியன்றோ க்ஷமாகுணமிருப்பது.

ஶௌசம் (சுத்தி)

அபக்ஷ்யபரிஹாரஶ்ச ஸம்ஸர்கஶ்சாப்யநிந்திதை:।
ஸ்வதர்மே ச வ்யவஸ்தாநம் ஶௌசமேதத் ப்ரகீர்த்திதம்॥

சாப்பிடக்கூடாததை வெலக்குதல், ஸாதுக்களுடன் சேர்ந்திருத்தல், தனக்கு ஏற்பட்டிருக்கும் தர்மத்தை அநுஷ்டித்தல், ஆக இம்மூன்றும் சௌசம் என்னப்படும். இவற்றில் அபக்ஷ்ய பரிஹாரமாவது ஸாதுக்கள் உண்ணத்தகாதவைகளை விலக்குதல். "ஆஹாரஶுத்தௌ ஸத்த்வஶுத்தி:, ஸத்த்வஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:, ஸ்ம்ருதிலம்பே ஸர்வக்ரந்தீநாம் விப்ரமோக்ஷ:" என்று ஆஹார நியமம் அவச்யம் வேண்டுமென்று வேதமே சொல்லுகிறது. இதன் விஷயத்தை ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் அருளிச்செய்த ஆஹார நியமம் என்னும் க்ரந்தத்தில் பார்த்துக்கொள்ளலாம். ஸாதன ஸப்தகத்தைச் சொல்லிவரும் ப்ரகரணத்தில் 'ஜாத்யாஶ்ரய நிமித்தாதுஷ்டாதந்நாத் காயஶுத்தி: விவேக:' என்று வ்ருத்திக்காரரே சொல்லி இருக்கிறார். ஜாதி தோஷமுள்ளதான உள்ளிப்பூண்டு முதலியவையும், ஆச்ரயத்தால் வெலக்கத்தகுந்த பதித சண்டாளர்களுடைய அந்நத்தையும், நிமித்தால் கெடுதலான ஈ புழுமயிர் உகுர்களிருக்கும் சோறும் விலக்கவேண்டும். இது விவேகம் என்று சொல்லப்படும் என்று அந்த வாக்யத்தின் அர்த்தம். இதையே அந்நதோஷாச்ச ம்ருத்யுர்விப்ராஞ்ஜிகாம்ஸதி அந்நத்துனுடைய தோஷத்தால் ப்ராஹ்மணர்களை ம்ருத்யு கொல்ல முயர்ச்சி செய்கிறான் என்றார் மனு. ஆகையால் ஆஹாரநியமம் அவச்யம்.

ஸத் ஸங்கம். இதுவும் சௌசத்தில் சேர்ந்தது.

மஹத்ஸேவாம் த்வாரமாஹுர்விமுக்தே:।

தமோத்வாரம் யோஷிதாம் ஸங்கிஸங்கம்॥ என்றார் சுகப்ருஹ்மருஷி. மோக்ஷத்திற்கும் நரகத்திற்கும் ஸாதனத்தை இந்த ச்லோகத்தில் வெளியிட்டார். அதாவது மோக்ஷத்திற்கு ஸாதனம் ஸத்ஸங்கம். நரகத்திற்கு ஸாதனம் துஷ்ட ஸஹவாஸம். மோக்ஷத்திற்கு ஸாதுக்களுடைய ஸங்கம் போறும் போல் நரகத்திற்கு ஸ்திரீ ஸங்கமுள்ள விடபுருஷர்களுடைய ஸங்கமே போறும் என்று ஏற்படுகிறது.

ஸ்வதர்மாநுஷ்டானம். அதாவது அவரவர்கள் வர்ணங்களுக்கும் ஆச்ரமங்களுக்குரிய தர்மங்களை அநுஷ்டித்தல். அப்படித் தனக்குறிய தர்மத்தை அநுஷ்டித்துவந்தால் அவன் ஸித்தியை அடைவான். பகவானை அடைய

இதைவிட வேறு மார்க்கமில்லை. இந்த அர்த்தத்தை ஸ்வ கர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ: என்று கீதாசார்யன் தாமே அருளிச்செய்தார்.

வர்ணாச்ரமாசாரவதா புருஷேண பர: புமாந் |
விஷ்ணுராராத்யதே பந்தா நாந்யத்தத்தோஷகாரக: ‖ என்று

விஷ்ணு புராணத்திலும் பராசர மஹர்ஷியால் சொல்லப்பட்டது. வர்ணத்திற்கும் ஆச்ரமத்திற்கும் தகுதியான கர்மங்களை அநுஷ்டிக்கிறவனிடம் பகவான் ஸந்தோஷிக்கிறார். அதைவிட பகவானுக்கு ஸந்தோஷத்தை உண்டு பண்ணக்கூடிய மார்க்கம் வேறு இல்லை என்று அர்த்தம்.

அநாயாஸ: ஆயாஸமில்லாமை.

யதாரம்பே ஸுஸுபேநாபி நித்யம் சரீரம் பீட்யதே |
தத்வர்ஜயேத் ஸதா ஸோऽநாயாஸ: ப்ரகீர்த்தித: ‖

தர்மமாக இருந்தாலும் எப்பொழுதும் சரீரத்திற்கும் மனதிற்கும் பீடையுண்டுபண்ணும் கார்யத்தில் முயலாமை.

மங்களம் (மங்களம்)

ப்ரசஸ்தாசரணம் நித்யம் அப்ரசஸ்த விவர்ஜநம் |
ஏதத்தி மங்களம் ப்ரோக்தம் ருஷிபிஸ் தத்வதர்சிபி: ‖

உலகத்தில் நல்லது என்று கொண்டாடப்படும் கர்மங்களைச் செய்தலும் நல்லதில்லாததை விட்டுவிடுவதும் மங்களம் என்று சொல்லப்படுகிறது. இதை ஆபஸ்தம்பர் எதைச் செய்தால் பெரியோர்கள் ச்லாகிப்பார்களோ அது தர்மம் எதைச் செய்தால் நிந்திப்பார்களோ அது அதர்மம். யத்து ஆர்யா: க்ரியமாணம் ப்ரசம்ஸந்தி ஸ: தர்ம: யத்கர்ஹந்தே ஸோऽதர்ம:" என்று சொன்னார். சாஸ்த்ரம் விதித்ததைச் செய்யாமையாலும் விலக்கினவைகளைச் செய்கையாலும் மனிதன் அதோகதியடைவான் என்றர்த்தமுள்ள "விஹிதஸ்யாநநுஷ்டாநாந் நிந்திதஸ்ய நிஷேவணாத் | நர: பதநம்ருச்சதி என்னும் ச்லோகத்தால் செய்யவேண்டியவைகளையும் விலக்கவேண்டியவைகளையும் மனு ப்ரஜாபதி விளக்கிக் காட்டினார்.

அகார்பண்யம்

ச்ரோத்ரியாதிப்யோ தாதவ்யம் சக்திதோ தாநமாத்ருதா |
அல்பாதல்பமபி யச்சக்த்யா தீயதே தத் அகார்பண்யம் ‖

நாம் கொடுக்கும் த்ரவ்யம் அற்பமாயினும் ப்ரீதி பூர்வகமாய் கொடுப்பது அகார்ப்பண்யமெனப்படும். இதை வேறிடத்தில்,

தாநம் ப்ரியவாக் ஸஹிதம் ஜ்ஞாநமகர்வம் க்ஷமாந்விதம் சௌர்யம் |
த்யாக ஸமேதம் த்ரவ்யம் துர்லபமேதச் சதுர்ப்பத்ரம் ‖

இனிமையான வாக்குடன்கூடிய தானம், கர்வமில்லாத ஜ்ஞானம், பொறுமையுடன் கூடின பராக்ரமம், த்யாகத்துடன்கூடிய த்ரவ்யமாகிய இந்நான்கும் சதுர்பத்ரம் என்று சொல்லப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அஸ்ப்ருஹா.

யதோத்பந்நேந ஸந்தோஷ: கர்த்தவ்ய: ஸ்வார்ஜிதேந து: |
பராயத்தம் நாபிவாஞ்சேத ஸாஸ்ப்ருஹா பரிகீர்த்திதா ‖

தனக்குக் கிடைத்த ஸ்வார்ஜிதமான தனத்திலேயே ஸந்தோஷமும் பிறர் தனம் விரும்பாமையாகிய இவ்விரண்டும் அஸப்ருஹா என்னத்தகும்.

அநஸூயா.

பரேஷாம் ச்ரேயஸ்காமம்வா ஸஹதே சோகமேவவா |
தத்வித்யாத்தம் ஸதாப்ராஜ்ஞ: ஸாநஸூயா ப்ரகீர்த்திதா ‖

மற்றவர்களுக்கு ச்ரேயஸ் ஏற்படும் விஷயத்தில் த்வேஷமில்லாமை அநஸூயை என்னப்படும். இந்த அநஸூயை என்னும் குணத்தை எல்லாரும் கொள்ளவேண்டும். அஸூயை இருந்தால் அநேக அநர்த்தங்கள் உண்டாகும். இதைத் திருவுள்ளம் பற்றி நம் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்

ஆசார்யவத்ய ஸதநாயதி தர்சநம் ந:
க்ராமஸ்ய ஸத்யமிஹ நாஸ்தி விபக்ஷபேத: |
ஆசாஸ்மஹே ஸ்ம யதிராஜதயாஸமீரை:
ஸத்த்வேந ஜந்தி விஜயமாத்வஸூயா ‖

எம்பெருமானார் தர்சனத்தை நிலைநிறுத்தினோம். ப்ரதிவாதிகளால் கலக்கம் உண்டாகவண்ணம் சததூஷண்யாதி க்ரந்தங்களை நிர்மாணம் செய்தோம். ஒன்றுமாத்திரம் ப்ரார்த்திக்கவேண்டியது. நம்முடைய ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தை அஸூயை விட்டு விலகவேண்டும். அஸூயையை இவர்கள் விடமாட்டார்கள். அவர்களைவிட்டு அஸூயை விலகவேண்டும் என்னும் கருத்

திஞல் இவ்விதம் அருளிச்செய்தார். ஆகையால் ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ண
வரும் அஸூயையை விட்டுவிட்டால் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்கு
க்ஷேமம். ஆகையால் அநஸூயை என்னும் குணத்தை அவச்யம் அங்கீ
கரிக்கவேணும் என்று நம் ஆசார்யன் அபிப்பிராயம். ஸதிஹிகுட்யே ஸமி
நிஷேதம் என்கிற ந்யாயத்தினுல் அஸூயை இருந்தால்தான் அதை விட
வேண்டுமென ப்ரார்த்திக்கும்படி நேர்ந்தது. அஸூயா என்று
ஸாதித்தால் நம்முடைய சிஷ்ய வர்க்கங்களை என்று அருளிச்செய்
ததினுல் மற்ற மதஸ்தர்கள் ஐக்மத்யத்துடன் தங்கள் மதத்தை வ்ருத்தி
பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்போல் சிஷ்ய வர்க்கங்களும்
அஸூயையை வேரறுத்து ஐக்மத்யத்தை அடைந்து க்ஷேமத்தை அடைய
வேண்டுமென்று கணிசித்து இவ்விதம் அருளிச்செய்தார். அஸ்மதீயாந்
என்ற பகு வசனஸ்வாரஸ்யத்தாலும் அஸூயா என்னும் ஏக வசனஸ்வாரஸ்
யத்தாலும் ஒரு ஸ்திரீயினிடம் பல புருஷர்கள் பற்றுடையவர்களானல்
விநாசத்துக்கு ஸ்திரீ காரணமாகலாம். ஸுந்தோபஸுந்தர்களில் ஒருவருக்
கொருவர் இணைபிரியாமலிருக்கச் செய்தேயும் திலோத்தமை என்னும் தேவ
தாஸியின் நிமித்தமாக மாண்டார்கள் என்று பாரத கதையில் கேட்டிருக்
கிறோம். அப்படிப்போல் அஸூயா தேவிக்கு இத்தனை ஸ்ரீ வைஷ்ணவர்
கள் இடம் கொடுக்கக்கூடாதென்று அர்த்தம் த்வனிக்கிறது. ஆகையால்
ஸ்ரீ வைஷ்ணவர்களான நாம் எல்லோரும் எம்பெருமானர் தர்சநத்தைச் சேர்ந்
தவர்கள் என்கிற ஒரு அபிமானத்தை அடைந்து ஐக்மத்யத்தை அடைந்து
ஸம்ப்ரதாய பேத யோஜனு பேதங்களாகிய சில்லரை வழியில் ப்ரவேசித்து
புத்தியைக் குறுக்காமல் விசாலமான மனஸுடன் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸித்தாந்
தத்தில் யோஜனுபேதம் அல்லது அர்த்தபேதமில்லை என்கிற அர்த்தத்தை
நிச்சயமாய் அங்கீகரித்து ஐக்மத்ய விரோதங்களைப் புறக்கணித்து அந்
தந்த ஸம்பாதாயப்படி அநுஷ்டிப்பவர்களிடத்திலும் அந்தந்த ஆசார்யர்க
ளால் ஏற்படுத்தப்பட்ட மார்க்கத்தில் நிற்கிறார்கள் என்றே கௌரவ புத்தி
பண்ணி அந்யர்கள் நம்மை பரிஹாஸம் செய்யும் நிலைமையில் இல்லாமல்
உந்நத லக்ஷ்யத்திலிருந்து ராமாநுஜாய முநயே நம: என்று ஸந்நிதிகளில் சொல்லுவதை உச்சாரணத்தோடு நிறுத்தாமல் அநுஷ்
டாந பர்யந்தமாக்கிக்கொண்டு பிறமதம் செழித்தோங்கும் இந்த ஸமயத்தில்
நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் மேன்மையுற்றது என்று அவர்களும் கொண்
டாடும்படியான உந்நதபதவியை அடைந்து நம்மாசார்யனை ஸ்ரீ நிகமாந்த
மஹாதேசிகன் அருளிச்செய்த வாக்கை அந்வர்த்தமாக்கி அவருடைய கிரு
பைக்கு பாத்ரமாகி அநஸூயை என்றும் ப்ரதான ஆத்மகுணத்தைக் கைக்
கொள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தை ஸவிநயம் வேண்டுகிறேன்.

ஸ்ரீ:

சமயம்.

(முதற்பகுதி: வைணவசமயப்போத நிலை யாராய்ச்சி.)

(ஸ்ரீமான் - திரு. அ. இராமகிருஷ்ணசடகோபதாசர்.)

திருவருள்விளக்கம் எய்தப்பெற்ற மனிதப்பகுப்புள் கலந்தீது உணா வல்லார் ஒருசிலரே. அச்சிலருள் உண்மைநெறி உணரும் ஆற்றல்வாய்க்கப் பெற்றோர் சிலரேயாவர். அவ்வாற்றலை உள்ளபடி அறிந்தின்புறா உம் அம் முது மக்கள் தம் இன்பங்களைப் பேரிதென வொருபோழ்தும் மதியாமற் பிறர் நலம் பொருட்டே உலகவாழ்வை உடையாராய்ச் சத்திய நெறியைக் கொண்டொழுகு பவர் ஆம். அன்னர் திறத்து அறிவும் அன்பும் பிணைந்த நல் எண்ணம் உள்ள ஏனைமக்களும் அவர்காட்டும் நெறிக்கண்ணே நின்றொழுகி நலம் பலபெற்றும் பிறர்க்குத் தந்தும் போதருவர். அறத்தின் பாற் பட்ட அவ்வுண்மையாளாது தூயவழக்க வொழுக்கங்களை நாமும் கைக்கொண்டு அவ்வழிகளிலே முற்படுவோமாயின் நம் அறிவுநிலை மேன்மேலும் துலங்கி விளங்கி உணர்வுநிலையை எழுப்புமென்றுணர்க. நன்றாய்க் கசக்கி இறுகப்பிழிந்து வடித்துக்காய்ச்சிய கருப்பஞ்சாற்றின் கட்டி திணிந்து பின்பு மிகு இனிப்புப் பொருளாக ஆம் ஆறுபோல, பரந்துபட்ட பொருட்களின் மீதுசென்ற அறிவு நாளடைவில் இறுகி உணர்வுக்கட்டியாகி, திரைபோன்ற ஓயா அலைச்சல்வாய்ப்பட்ட மனதை ஒருமைப்படுத்தி மனோவாக்குக் காயங்களுக்கு எட்டாத ஒரு முதற்பழம் பெரும்பொருள் உண்டென்ற நிலைஞான வழியகத்துப்போய் நின்று, வேறு எப்பொருண் மாட்டுங்கருத்தான்றாது தாங்கருதிய அப்பொருணுட்டத்திலே அகநாட்டத்தைச் சலிக்காது செலுத்திக்கூற வொண்ணு ஒரு பேரின்பத்தை நுகர்கின்றது. இங்ஙனம் இவ்வகை இன்பமும் ஒன்று உண்டென்பதை விளக்கும்தூய அறிவினர், தாம் அகத்தும் புறத்தும் கண்டநுபவித்த மெய்ம்மைப் பொருள்கள் பல. ஒவ்வொன்றினையும் அறிந்துணரும் ஆற்றல் எல்லார்க்குமே அமையாது. என்றாலும் நாம் ஒவ்வொருவரும் இயன்றவரையில் அம்மெய்ம்மைப் பொருணுட்பங்களை யெல்லாம் தெரிந்துகொண்டு பழகி ஒழுகுதல் நமக்கு முதன்மையான கடமை ஆம். ஆகவே *மனிதப்பேறுகளாகிய அறம்பொருள் இன்பம்வீடு என்பனவற்றுள் வீட்டுலகவாழ்க்கையை அடைதற்கு இவ்வாறு ஒழுகினுல் ஏற்றமுற்றவராவோமென்றறிக!

---

* புருஷார்த்தம்.

[1]வீடு என்றும் நெடிற்றொடர் குற்றியலுகரப்பெயர் விடுதலென்னும் தொழிலைப் பண்புப்பெயராய் விடுவென்னும் ஏவல்வினையில் நின்று, பிரகிருத உலகவாய்ப்பட்ட அறம்பொருளின்பங்களைவிடு, விடுவையேல், இவற்றை விடுதலாகிய அறமே நிரதிசயவின்பத்ததாய் நிலைதலுற்ற அழியாப்பேர் இறைவன் மாட்டொன்று படுதலாகிய தன்மையைப்பயக்கும் என்பதைச் சுட்டுகின்றது. இதனான் மாயாவுலகப்பற்றை அறவிடுதலும் அழியாவொப்புயர்வற்றதோரிடத்தை அடைதலுமாமென வறிகின்றோம். இப்பெற்றி நோக்கியே நம்மாழ்வாரும், 'வீடுமின்' என்றருளியதூஉமென்க. இதனாற் போந்தது என்னவென்றால் பருவுடம்பின் ஊனக்கண் காண்கின்ற அறம்பொருளின் பங்களிற்பலகாலும் பழகிப் பின்கைவந்ததொரு நுண்ணுடம்பின்ஞானக் கண்ணளவை யான் காணப்படாத அவ்விறுதிப் பேறாகிய அவ்வீட்டினை காண ஒருவன் அவாவவே, அவ்வவா, தனக்குற்ற ஆற்றலோடு பலநாளாகப் பண்பட்டு வருமாயின், அஃதே மெய்யுணர்ச்சியைத் தரவல்லதென்பதேயாம். அம்மெய்யுணர்ச்சி, பக்குவப்படாத ஆதிமனிதர்களால் பலவேறாகத் திரிக்கப்பட்டுப் பின்னர் நாட்செல்லச்செல்ல அதுமுதிர்ந்து முடிவானதும் செப்பமுள்ளதுமான ஓர் ஒழுக்க நிலைக்கண் வந்து நின்றதென்க. அவ்வாறு நின்ற நிலைமைகளின் தன்மைகளை விரிவாக விளக்கிவைத்தனர் அறிவான் முதிர்ந்ததூய ஞானப்பெரியோர்கள் என்றுய்த்துணர்க. அத்தகைப் பெரியோர்கள் உலகத்துட்பல பாகங்களிற் றோன்றி இன்றவனை வழிபடு உம் பலப்பலவொழுக்க நெறிகளை ஓதுவாராயினர். அந்நெறிகளைக் கூறுவதுதான் சமயம் என்பது.

இனி நமது கண்ணெதிரே தோன்றும் பரந்த இவ்வுலகமும் அப்பால் தோன்றும் ஞாயிறும் திங்களும் மற்றுத்தொலையில் தோன்றும் உடுக்களும் இவற்றினை இயக்கி ஒன்றுபடுத்தி உயிர்கள் வாழுதற்கேற்ப ஓர் அமைதியினை உண்டாக்கும் ஐம்பெரும் தத்துவங்களோடிணங்கி நிற்கும் ஒருபேர் ஆற்றல்வாய்ந்த முழுமுதற்பொருள் உண்டென்றும், அப்பொருள் உயிர்கள் வாழ்தற்குப் பலப்பல உலகங்களைப்படைத்து, பெட்டை தனது குஞ்சுகளை இடுக்கிக் காக்குமாறுபோல, தோய்ந்தும் தோயாததுமாய் உடன் நின்று காத்து அவ்வுயிர்களைப் பலப்பல பிறவியினுள் ஆழ்த்தி, பின்னர் அறிவூட்டி தன் மயமாக்கி, தன்பாலே சேர்த்துப் பேரியதொரு நிரதிசய இன்பத்தைத் தருகின்றதென்றும் அங்ஙனம் அவ்வுயிர்கள் அவ்வின்பத்தை அடையும் எல்லைகாறும் உலகம் தன்னியற்கையோடு நின்றுலவ ஒவ்வொரு உயிரும் வாழ்தற்கமைந்த வழிகளையும், அவ்வழிகளிலே நிற்க ஒழுக்கங்களையும், அவ்வொழுக்கங்களை உலகில் நிறுத்தவேண்டி, தன்னருள்

1. வீடு என்பதனை, பகவதநுபவம், ஆத்மாநுபவம் என்றிரண்டாகப் பிரிப்பர் ஸ்ரீவைஷ்ணவர்கள். பிரிக்கவே பேறுகள் ஐந்தாகும்.

நிறைந்தமக்களுட் பெரியோரை ஆங்காங்கு பிறக்கச்செய்தனரென்றும், ஒற்றுமை, அன்பு, அருள், கொடை, மெய், இவைமுதலாய நல் ஒழுக்கங்களை அப்பெரியோர்கள் வாய் வழியாலே செய்வித்தனரென்றும், ஒவ்வொருசான்றோரும் இயம்பியநெறிக்கண்ணே மக்கள் நின்று ஒழுகிவரவே அதில் உறைத்து நின்று அதுவே (நம்பெரியாருரைத்த அறமொழியே) தம்மிறுதிப்பேற்றுக்கு இன்றியமையா ஆணைமற்றதுவாமென்ற தனைக்கடவாது நிற்பரென்றும், இங்ஙனம் பண்டைய சான்றோர் பலர் பலவிடத்துங்கூறிய அறமொழிகளை ஆய்ந்து உண்மைகாட்டிய பலச்சில சான்றோர் இன்னும் மேலாய நுட்ப ஆறுகளை எல்லாம் உய்த்துணர வைப்பரென்றும், நாம் தனித்து நின்று ஆராயுமிடத்து விளங்குகின்றன.

இதுகொண்டு, ஆதிமனிதர்கள் வரலாற்று வழியேசென்று நுணுகி நோக்குங்கால், அவர்கள் தமக்குப் பிற்பட்டு வந்தோர் அன்னோர் கூறிய மொழிகளைச் செவ்வனம் ஆராய்ந்து உண்மைநெறி கண்டுரைப்பாராயினர் எனப் பெறப்படுகின்றது. உண்மைநெறி இதுவாதலையுணர்ந்து அறிவுவிளக்கம் பெற்றோர், அறிந்தும் கேட்டும் கண்டும் வந்ததத் தமது நல் அறமொழிகளைக் கிளந்தெடுத்தோத அவை தம்மை ஓட்டிச்செல்கின்ற மக்கள் தம்மனதில் உதித்த எண்ணமே நீடு நின்று நிலைத்துக்காழ்பேறி ஓர் ஒழுங்குக்குவரூஉம் ஒருவகை நெறியே சமயம் ஆகும். இது அவரவர் கருத்துட்கொண்ட பொருள் எதுவோ அதனையே பற்றிக்கொண்டிருக்குமாதலின் மதம் எனக்கூறப்படுகின்றது. மதம் என்பதை கருத்து அல்லது அபிப்பிராயம் என்ப. தாங்கொண்ட பொருளிடத்தே ஒருவர் உறைத்து நின்று பின்னர் மக்களை தம்மொடு பொருந்தச் செய்திணக்கவே அம்மக்கள் அவர் கூறு நெறிநோக்கிச் சென்று அவர் கருத்தில் ஈடுபடுவர். ஒருவழி பற்றிச் செல்கின்ற எம்மொடு சிலர் இணங்கி வருவாராயின், யாங்கொண்ட கருத்தே அவர் கருத்தாய், எமது போக்கினையே அவர் போக்காய்க் கொள்வரென்பது கண் கூடன்றே! இங்ஙனம் சான்றோர்கள் பலர்தோன்றித் தந்தங்கருத்தினை நிலைநாட்டிப்போதர, அக்கருத்தொடுபிணைந்து வயங்கிய மக்களும் பலவகைச் சமயினர் ஆயினர். ஆகவே சமயம் என்பது உலகம் நடத்தற்பொருட்டு ஏதுவாய், அஃது தோன்றியக்கால் தொட்டு இறைவனால் நியமிக்கப்பட்ட ஓர் ஒழுக்கம் ஆகும். அவ்வொழுக்கம் நாளடைவில் முற்றி பரிசுத்தமாய் இறைவனைக்காணும் அவாவில் ஊன்றி நிற்குமாயின், அங்ஙனம் நிற்கின்ற பற்று இல்லாத ஒருவகைநெறியே சமயம் என்றீண்டைக்குக் கோடற்பாலதென்க. எனவே இறைவன் என்னும் ஒருபேர் முழுமுதற்பொருள் உண்டென்றும், அவ்விறைவனை எய்தும் நெறியே மக்கட்கு உயர்ந்த ஒழுக்கம் என்றும், அவ்வொழுக்கங் கைக்கொண்டார் கருத்தே சமயம் அல்லது மதம் என்றும், அச்சமய நெறி நிற்குமுயிரோரே சமயிகளென்றும் பெறப்பட்டன.

இனி யிச்சமயம் ஆதியில் எவவாறிருந்த தென்றாராய்வுழி, ஆதி மனிதர்களின் றன்மை யிதுவாதலைத் துணிந்து அறிதற்கு ஏலாது. என்னை? ஆதியில் எங்கே, எவர், எவ்வாறு, எந்நெறிகொண்டு, எம்மொழியில், இறைவனது இயல்பை இசைத்தனர்? இறைவன் என்னும் தத்துவப்பொருண்மீதொருமையோ டன்னார்க்குக் கருத்துச்சென்றதா? என்றிவை போன்றெழூஉங்கடாக்கள் பலவாதலின் உலகவரலாற்றை உற்றுநோக்குமிடத்தும் பெறப்படு முண்மை ஏதும் விரிவாய் இன்றென்பது. எனவே ஆதியில் மனிதர் இன்ன முறையைக் கொண்டிருந்தார்களெனத் தெற்றெனப் புலப்படுதல் இன்றாம். அற்றேல் பண்டைய மக்கள் எனைத்துணை நூல்கள் செய் திறைவனதியல்பை விளக்கி யுள்ளார்களென்னில்; அற்றன்று: ஆதிமனிதர்கட்கும் பண்டையமக்கட்கும் வேற்றுமை உண்மையானும், முன்னவ ரெழுதியவற்றினின்று நுட்பங்கண்டுரைத் தார் பின்னவராகலானும் என்பது. என்றால், மக்கள் பிறந்த துணையானே அறிவு சாலப் பெறாராய், பசியென்பதொன்று நினைவை எழுப்ப, அந்நினைவே நாட் செல்லச் செல்ல ஒன்றன் மீதவாவுறுத்தம் முறையே அறிவு விளங்க, அவ்விளக்கத்தானே அறிவு மேன்மேலும் பிரகாசிக்க, அப்பிரகாசமானது முன்பு கண்டவை எல்லாம் அறியாமை பாற்பட்டவை என்று கண்டாற் போலே ஆதிமனிதர்களும் கடவுள் என்பது இனைத் தென்றறியாராய்ப் பலப்பல நினைந்து மொழியளவிலே நிற்க அவர்க்குப் பின்வந்த பண்டைய மக்கள் அம்மொழிகள் உதவியாலே உள்ளக் கிளர்ச்சியுற்று, அக்கிளர்ச்சி பயனான் நுட்ப மொழிகள் பலகூற, அவையனைத்தும் விழுமிய உரைகளாய் விளங்கிட, அவர் தமக்குப் பின்வந்த பேரறிவுடையோர் அம்மொழிகளை இன்னும் வேண்டுமளவு நன்காராய்ந்து இறைவனது இயல்பை இசைத்துச் சென்றனர்க; இவ்வாறு ஆதியில் அறியாமையால் பெறப்பட்டவையே நாளடைவில் பண்டைய மக்களால் அறிவு முதிர்ந்தவையாய் ஆக்கப்பட, நமது முன்னோர்கள் அந்நுணுக்கவுரைகளைக் கைப்பற்றி ஒழுக ஆரம்பிக்கலாயினரென்க. இங்ஙனம் ஆரம்பிக்கப்பட்ட பிற்பாடே இத்தத்துவ நெறிகள் மிக்குவிரிய அன்னோர் அந்நெறிகளை ஒழுங்குபடுத்தி எழுதிவைத்தனர். எழுதப்பட்ட அவைவகள் பல்கிய உரைகளோடு விளங்கவே சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினரும் அவசரப்பிணியருமாகிய நாம் உண்மை காணாவர் தாம் என்றுணர்க.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:.

வால்மீகியும் கம்பரும்.

(ஸ்ரீ. உப. வே. வி. ர. குப்புஸாமி அய்யங்கார்.)

வால்மீகி மஹா ரிஷி.

வால்மீகி என்ற பதத்திற்கு புற்றில் இருந்து உண்டானவர் என்று அர்த்தம். (வால்மீர்-புற்று.)

இவர் வெகுகாலம் தபஸ் செய்துகொண்டிருக்கையில் இவருடைய சரீரத்தின் நாற்புறங்களிலும் புற்று வளர்ந்து அவரை மூடிக்கொண்டது. பிறகு வருணபகவான் அவர்மீது கருணைகூர்ந்து மழை பெய்து புற்றைக் கரைத்துவிட்டு இவரை வெளிப்படுத்தினார். அதனால் இவருக்கு வருண புத்திரர் என்றும் ப்ராசேதஸர் என்றும் பெயர். இவர் தபஸ் செய்த இடம் கங்காநதியின் வடபக்கத்தில் உள்ள தமஸா நதிக்கரை.

இவர் காலம் த்ரேதாயுகத்தில் இருந்தவரென்றும் அதற்கு முந்தியே ஸ்ரீ ராமபிரான் அவதரித்தாரென்றும் தெரியவருகிறது. வால்மீகி மஹா ரிஷி, முன் ஜென்மத்தில் ஓர் வேடராக இருந்து ஸப்த ரிஷிகளால் ராம மந்திரத்தை உபதேசிக்கப்பெற்று வெகுகாலம் கடுமையான தபஸ் செய்துகொண்டிருந்ததினால் அந்த ஜன்மம் போய் வால்மீகி என்ற ரிஷியாக ஆனார்.

கம்பர்.

இந்த சாலிய வாகன சகாப்தம் 8-வது நூற்றாண்டில் சுமார் 1040 வருஷங்களுக்கு முன் இச் சோழ மண்டலம் திருஅழுந்தூரில் (திருமங்கை) ஆழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற இந்த திவ்விய தேசமானது இப்பொழுது குத்தாலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு 4 மைல் தெற்கே உள்ளது. இக்கம்பர் ஓர் வேளாளர் குலத்தில் பிறந்தவர். (இவர் மூவலூரில் ஓர் பிராம்மண கைம்பெண்ணுக்கு குமாரராகப் பிறந்து ஓர் ஓச்சனால் வளர்க்கப்பட்டவர் என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.) இக்கம்பரின் தகப்பனார் பெயர் ஆதித்தன் எனத் தெரிகிறது.

இவருக்கு கொஞ்சம் வயது வந்தவுடன் திருவெண்ணெ நல்லூர் சடையப்ப முதலியார் திருமாளிகையில் இருந்துகொண்டு அவர் குமாரர்களுக்கு புஸ்தகம் தாங்கிச் சென்று கல்விச்சாலையில் படித்துவரும்நாளில் தன் உபாத்தியாயருடைய தினைக்கொல்லையைக் காத்துவரும்பொழுது அவ்வூர் அரசன்

குதிரை அத்தினைப்புலத்தை அழித்துவிட அதினால் ஏக்கம்கொண்டிருக்கையில் அங்கிருந்த காளிகா தேவியின் வரப்பிரஸாதத்தால் பீஜாக்ஷரங்களை உபதேசிக்கப்பெற்று அக்குதிரைமீது ஓர் வசைக்கவி பாட அக்குதிரை இறந்துவிட்டது. மறுபடியும் தன் ஆசிரியர் சொற்படி குதிரை பிழைக்கும்படி பாடினவுடன் அக்குதிரை பிழைத்து எழுந்துவிட்டது. இச்செய்தி கேட்ட அத்தேசத்து அரசனாகிய காளிங்கராயன் என்பவன் இவ்வதிசயத்தை கேள்வியுற்று இவரை வருவித்து தினைப்புலத்தை காற்கும் கைக் கம்புடன் நின்ற இவரைப் பார்த்து, இக்கம்பனை பாடியவன் என்று கேட்க, அங்குள்ளோர் ஆமென, அதுமுதல் இவருக்கு கம்பர் என்று பெயர் உண்டாயிற்று. பின்பு குலோத்துங்க சோழ மஹா ராஜன் கட்டளைப்படி ஸ்ரீமத் ராமாயணத்தை ஸ்ரீராமபிரான் அவதாரம் முதல் பட்டாபிஷேகம் வரையில் ஸரஸ்வதி தேவியின் அனுக்கிரகத்தால் விருத்தக் கவிகளால் பாடி முடித்தார். பின்பு நேர்ந்த அநேகம் வித்துவான்களைச் ஜயித்து திருவரங்கம் பெரிய கோவிலில் மோட்டு அழகிய சிங்கர் ஸன்னிதியில் ஸ்ரீமான் நாதமுனிகள் அக்ராஸனத்தின்கீழ் அரங்கேற்றி கம்ப நாட்டாழ்வார் என பெயர்பூண்டார். இவர் ஆழ்வார் விஷயமாய் சடகோபரந்தாதியும் பாடி உள்ளார். ஸ்ரீரங்கத்தில் இவர் கட்டுவித்த ஓர் மண்டபம் இன்னும் இருப்பதாகவும் அவர்மூர்த்தியைப்போல் ஓர் சிலா விக்ரஹம் இருப்பதாகவும் தெரியவருகிறது. இவர் மதக்கொள்கை சுத்த வைஷ்ணவமேயாம்.

ஸ்ரீமத் ராமாணம்.

வால்மீகி ராமாயணம்.

ராமாயணம் என்பதற்கு ராமனுடைய சரித்திரம் என்று அர்த்தம். இப்பெயர் அநேக ராமாயணங்களுக்கு பொதுவாக இருந்தாலும் வால்மீகி ராமாயணம் முந்திய காவ்யமாதலால் ராமாயணம் என்பது வால்மீகி ராமாயணத்துக்கே பொருந்தும். ராமாயணம் ஸம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளில் வித்துவான்களால் அநேக ராமாயணம் செய்யப்பட்டிருக்கிறது. இவர்களில் முதன்மை பெற்றவராகிய வால்மீகி மஹா ரிஷி நாரதர் உபதேசம் பெற்று பிரும்மாவின் அநுக்கிரகத்தால் ஸப்த காண்டங்களையும் 24,000 ச்லோகங்களால் நவரஸத்துடன் விஸ்தாரமாகச் செய்து அருளினார்.

ராமா என்னும் பதம் 'ஓம்' என்கிற ப்ரணவத்தையும் காட்டுகிறது. அதில் அகாரம் ப்ரும்மமாகிய ராமனையும் உகாரம் ஜகன்மாதாவாகிய ஸீதையையும், மகாரம் ஜீவனாகிய லக்ஷ்மணனையும் சொல்லுகிறது. (ராமா என்கிற பதத்தில் உகாரம் வருவிக்கப்பட்டது.) இவர்களே சித், அசித், ஈசுவரன் என்றும் தெரிகிறது. வால்மீகர் ராமன் வனத்துக்கு போகும்போது, ராமன் முன்னும், ஸீதை மத்தியிலும், லக்ஷ்மணர் பின்னுமாக போனார்களென்று சொல்லியிருப்பது ப்ரணவம் கால்கொண்டு நடந்ததுபோல் இருக்கிறது. (கோவிந்தராஜீயம்)

இவ்விஷயத்தை கம்பர் (மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரம்) என்று சொல்லியிருப்பதால் ராமன் ப்ரணவத்தின் பொருள் என விளங்குகிறது.

வால்மீகி ராமாயாயணம் வேதமூலமுடையது என்பதை வால்மீகர் 'காயத்திரீ மஹா மந்திரத்தின் 24 அக்ஷரங்களின் வரிசையாகக் கொண்ட முதலெழுத்துக்கள் ஒவ்வொன்றும் 1000 சுலோகங்களில் முதலெழுத்தாக இருப்பதால் இது வேதமூலமுடையது என்றும், கம்பர் (கலையாழி கதிர்த்திங்கள் உதயத்தில் கலித்தோங்கும், அலையாழி யெனவளர்ந்தார் மறை நான்கும் அனையார்கள் என்பதாலும் நிரூபிக்கிறார்.)

ஸ்ரீராமாயணம் சரணாகதி சாஸ்த்ரம். பாலகாண்டத்தில் தேவதைகளெல்லாரும் சேர்ந்து ப்ரும்மாவை முன்னிட்டுக்கொண்டு ராவணன் முதலான ராக்ஷஸர்களை வதம் செய்யவேண்டியதற்காக பகவானை சரணாகதி செய்தார்கள். ஸர்க்கம் 15) கம்பர் திரு அவதாரப்படலம்.

அயோத்தியா காண்டத்தில் சித்ரகூட பர்வதத்தில் ராமன் எழுந்தருளி இருக்கும்பொழுது பரதன் வந்து ராமனை ராஜ்யத்தை ஒப்புக்கொள்ளும்படி ப்ரார்த்தித்து சரணாகதிபண்ணினார். (கம்பர். கிளைகண்டு நீங்கு படலம். ஸர்க்கம் 104.)

ஆரண்ய காண்டத்தில் தண்டகாரண்யத்தில் உள்ள ரிஷிகள் ராக்ஷஸர்கள் தங்களைச் செய்துவரும் உபத்திரவத்துக்காக தங்களை காப்பாற்றவேணுமென்று ராமனை சரணாகதி செய்தார்கள். (கம்பர் அகத்தியப்படலம் ஸர்க்கம் 6.))

கிஷ்கிந்தா காண்டத்தில் ராமன் ரிச்யமூக பர்வதத்தில் இருந்த சுக்கிரீவனை தன் தேவியாகிய ஸீதையை தேடிக் கண்டு பிடிக்கவேண்டியதற்காக சுக்கிரீவனை சரணமடைகிறார். ஸர்க்கம் 4.)

(இந்தச் சரணாகதியானது ஸாங்கமில்லாமலும் காம்யமுமாக இருக்கிறது.)

இந்த காண்டத்தில் கம்பர் சுக்கிரீவன் தன்னை ராஜ்யத்தினின்றும் துரத்தித் தன்னை கொல்லவந்த வாலிக்கு பயந்து ராமனை சரணமடைகிறான். (மராமரப்படலம்.)

சுந்தர காண்டத்தில் முன் சித்ரகூட பர்வதத்தில் ஸீதாபிராட்டியிடத்தில் அபராதப்பட்ட காகாசுரன் சக்கரவர்த்தி திருமகனை சரணாகதி பண்ணினதை ஸீதை அனுமானிடம் சொல்லி அனுப்புகிறாள். (ஸர்க்கம் 38) சூடாபணிப்படலம்.

கம்பர் இந்த காண்டத்தில் அனுமாரிடத்தில் உண்டான பயத்தை போக்கவேண்டியதற்காக ராக்ஷஸிகள் ஸீதையை சரணகதி செய்தார்கள். (ஸர்க்கம் 27.) (கம்பர் நிந்தனைப்படலம்.)

யுத்தகாண்டத்தில் ராவணன் தனக்கு ஹிதத்தைச் சொன்ன விபீஷணரைக் கோபித்து துரத்திவிட அப்போது விபீஷணர் தன் மந்திரிகளுடன் ஸமுத்தரத்தை தாண்டிவந்து சக்கரவர்த்தி திருமகனை சாங்கமாக சரணகதி பண்ணி கடைத்தேறினர். (ஸர்க்கம் 16.) (கம்பர் விபீஷணர் அடைக்கலப்படலம்.)

ராமாயணம் என்னும் இதிஹாஸத்தால் வெளியுரையாகத் தோன்றும் சரித்திரப் பொருளன்றி உள்ளுரைப் பொருளாகிய, நீதி, தர்மம், வேதாந்தம் இவைகளும் கிடைக்கின்றன. இன்னும் வால்மீகர் "ஸீதாயாஶ்சரிதம் மஹத்" என்று சொல்லியிருப்பதால் லக்ஷ்மி தேவியின் அவதாரமாக விளங்கிய ஸீதா தேவியின் சரித்திரம் என்றும் தோன்றுகிறது. ஸ்ரீராமன் ராவணன் முதலியவர்களை வதம்செய்து அயோத்தியில் ராஜ்யபரிபாலனம் செய்துகொண்டு இருக்கும்போது அசுவமேத யாகம் செய்வதற்கு முந்தியே வால்மீகி மஹா ரிஷி இந்த காவ்வியத்தை செய்தருளினர்.

(கம்பர்) நாரணன் விளையாட்டெல்லாம் நாரதமுனிவன் கூற, ஆரணக் கவிதை செய்தான், அறிந்த வால்மீகி என்பான் என்பதினாலும் உணர்க.

ஸ்ரீராமன் இந்தப் பரதகண்டத்தை ஆண்டுவந்தவரும் சூரிய வம்சத்து சக்கரவர்த்தியுமாகிய தசரத சக்கரவர்த்திக்கு ஓர் த்ரேதா யுகமும், துவாபர யுகமும் கூடுகிற ஸமயத்தில் சக்கரவர்த்தித் திருக்குமாரராக அவதரித்தார் என்பது ஆன்றோர் கொள்கை. வால்மீகர் ஸ்ரீமத் ராமாயணத்தை 24000 ச்லோகங்களால் செய்திருக்கிறார் யென்றாலும் காண்டங்களின் கணக்குப்படி 647 ஸர்க்கங்களுள்ள 24253 ச்லோகங்கள் ஆகின்றன.

ஸ்ரீமத் ராமாயணத்தில்

காண்டங்கள்.	ஸர்க்கம்.	ச்லோகங்கள்.
1. பாலகாண்டம்	77.	2255.
2. அயோத்தியாகாண்டம்	119.	4415.
3. ஆரண்யகாண்டம்.	75.	2732.
4. கிஷ்கிந்தாகாண்டம்.	67.	2620.
5. சுந்தரகாண்டம்.	68.	3006.
6. யுத்தகாண்டம்.	131.	5990.
7. உத்தரகாண்டம்.	119.	3234.
	647.	24253.

ஸ்ரீ:

ஸ்திரீகளின் ஆஹ்நிக தர்மங்கள்

(ஸ்ரீ. உப. வே. பார்த்தஸாரதி அய்யங்கார்.)

ஸாயம்ப்ராதஶ்ச விஸ்ரம்பா தைவவத் பதிசிந்தநம் ।
(வாத்ஸ்யாயந ஸூத்ரம்) கிருஹ க்ருத்யங்கள் செய்வதில் ஸமர்த்தையாகவும், தன் பர்த்தாவிடத்தில் பிரியமாய் பேசுபவளாகவும், பர்த்தாவைத் தன் ப்ராணனாக பாவிப்பவளும் பதிவ்ரதையாகவுமிருக்கிற பார்யையானவள், பர்த்தாவானவன் கெட்ட நடவடிக்கையுள்ளவனானாலும், காமியாகவும் நல்ல குணங்களில்லாதவனாகவுமிருந்தாலும், பதிவ்ரதையான ஸ்திரீகளால், கடவுளைப்போல் ஆராதிக்கத்தகுந்தவன், என்கிற மனு வசனப்படிக்கும், பர்த்தா பட்டணத்திலிருந்தாலும், காட்டிலிருந்தாலும் பாபியாகவிருந்தாலும், புண்ணியவானாகவிருந்தாலும், பணமில்லாதவனாகவும், காமியாகவும், கெட்ட ஸஹவாஸங்கள், நடவடிக்கைகள் உள்ளவன் ஆனாலும் அவனை தெய்வமாகப் பாவித்து உபசரிக்கும் ஸ்திரீக்கு, உத்தமமான லோகங்களும், இந்த லோகத்திலும் விசேஷமான ஸுகங்களும் உண்டு. நான் யோசித்துப் பார்த்ததில் ஸ்திரீகளுக்குத் தன் கணவனைத் தவிர வேறு பந்துக்களில்லை, என்கிற ஸ்ரீமத் ராமாயணம், பிராட்டி வசனப்படிக்கும், தன் கணவனிடத்தில், கலெத்தம்ஸாவ த்வயோ: என்கிற பவபூதி வாக்கியப்படி, அப்பேர்ப்பட்ட பிரமேதிசயமுடையவளாய், தன் கணவன் மனம் கோணமல், அவனிஷ்டப்படி நடந்துகொண்டுஇல்வாழ்க்கையை நடத்தவேண்டும். அப்படியில்லாவிட்டால்,

ஆநுகூல்யம் களத்ரஸ்ய ஸ்வர்க்கோ ஸவதி நிஶ்சிதம் ।
ப்ராதிகூல்யம் களத்ரஸ்ய நரகோ நாஸ்தி ஸம்ஶய: ॥

அதாவது, எவனுக்கு மனைவி அனனுகூலமோ அவனுடைய இல்வாழ்க்கை, நரகானுபவமென்றும் சொல்லுகிற தக்ஷ ஸ்மிருதிப்படிக்கும்,

அநுகூலா ப்ரியா பார்யா யஸ்ய நாஸ்தி குடும்பிந: ।
அரண்யம் தேந கந்தவ்யம் யதாரண்யம் ததா க்ருஹம் ॥

எந்த குடும்பிக்கு, அனுகூலமாகவும் பிரியையுமான பார்யை இல்லையோ, அவன் உடனே காட்டிற்கு போகவேண்டும். அவனுக்கு வீடும், காடும் துல்யமே, என்கிற பாரத வசனப்படிக்கும், பர்த்தாவுக்கு ஏற்ற பதிவ்ரதையுமுண்டானால் எத்தாலும் கூடி யிருக்கலாம். சற்றேதேனும் தாறுமாறாய் தானிருப்பாளாமாகில் கூறாமற் சந்யாசம் கொள், (ஔவை.) கூற்றமே இல்லிற்கிசைந்தொழுகாப் பெண் (வாக்குண்டாம்.) உடன்பாடிலாத மனைவி தொழிலின்னா (இன்னா நாற்பது,) இதுகளின்படி சுகப்படாது. அப்பேர்க்கொத்த துர்க்குண ஸ்திரீகள் வாய்க்கப் பெற்றவர்கள்,

[illegible]
[illegible] ॥

என்கிற வசனப்படிக்கு வேரு விவாஹம் செய்துகொள்ளலாம், அல்லது கீழ் சொல்லியபடி, வாந ப்ரஸ்தனைகவாவது ஸந்யாஸியாகவாவது ஆய்விடவேண்டும். அப்பேர்ப்பட்ட உத்தமகுணமுள்ள பதிவ்ரதா ஸ்திரீயானவள் [illegible] என்னும், பாரத வாக்கியப்படி தன் பர்த்தா பிரதிதினமும் காலையில் விழித்தெழுமுன் ப்ராஹ்ம முகூர்த்தத்தில், அதாவது

[illegible] ।
[illegible] ॥

என்கிற நியாயப்படி. உஷக்காலத்தில் பர்த்தாவுக்குமுன் எழுந்திருந்து கை கால்களை அலம்பிக்கொண்டு, இரண்டு தடவை ஆசமனம் பண்ணி, உட்கார்ந்துகொண்டு, தெய்வந்தொழா அள், கொழு நன்தொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை (திருக்குறள்.) அதாவது தெய்வம் தொழுவதற்கு மனம் தெளிவு அவசியம், காலையில் நித்திரை செய்து எழுந்தவுடன் நல்ல நித்திரை செய்து எழுந்தவர்களுக்கு மனத்தெளிவு உண்டாவது நிச்சயம், அப்படி மனந்தெளிந்த காலத்தில் வேறு தெய்வங்களைத் தொழாமல் தனக்கு முக்கிய தெய்வமாகிய கணவனைத் தொழுபவள் பெய் என்று சொன்னால் மழை பெய்யும் என்கிறபடி. தன் பர்த்தாவைத் தொழுதுவிட்டு, ஹரிঃ, ஹரிঃ, என்று எழுதரம் சொல்லிவிட்டு, வாஸுதேவாதி 4 நாமங்கள் கேசவாதி 12, மத்ஸ்யாதி 10, அதாவது வாஸுதேவாயநமঃ, என்று ஆரம்பித்து, கல்கினேநமঃ என்கிறவரையில் சொல்லிக்கொண்டும், திருப்பல்லாண்டு, திருப்பள்ளி எழுச்சி, திருப்பாவை முதலான ஆழ்வார் திவ்யஸூக்திகளையும் கூடுமானல், ரிஷிகளால் சொல்லப்படாததுகளாகவும், ஆசார்யர்களால் ஸாதிக்கப்பட்டதுகளாகவுமிருக்கிற ஸ்தோத்திரங்களையும் அனுஸந்தித்துக்கொண்டு, முதலில் க்ருஹத்தின் முற்றத்திலும், பிறகு வாசலிலும், கோமயம் ஸம்பந்தப்பட்ட ஜலத்தால் தெளித்து நனைக்கவேண்டும். [illegible] (வாத்ஸ்யாயநஸூத்ரம்) மனைவி வீட்டை மழமழவென்றிருக்கும் தரையுடன் சுத்தமாகவும், மனோகரமாகவுமிருக்கும்படி மெழுகிப் பெருக்கி அநேகவிதமான புஷ்பங்களால் அலங்கரித்து தெய்வமிருக்கும் அறையைப் பூஜித்து வீட்டில் காலையிலும், மத்தியானத்திலும், சாயங்காலத்திலும் பிருணிகளுக்கு பலிசாதலைச் செய்யவேண்டும்.

[illegible] ।
[illegible] ॥

என்கிற வ்யாஸஸ்மிருதிபோல நன்ருகப் பெருக்கி,

[illegible] ।
[illegible] ॥

என்கிறவ்யாஸ வசனப்படி வெள்ளி, சனி, ஞாயர், செவ்வாய் இந்தக் கிழமைகளிலும் சதுர்த்தசியிலும், விசேஷ நிமித்தங்கள், அதாவது அமாவாஸ்யை முதலான பிதுர் தினங்கள், ஸ்ரீஜயந்தி முதலான பகவதாருதன விசேஷ தினங்கள், தவிற மற்றைய நாட்களில் வீடு மெழுகக்கூடாது, என்கிறபடி மெழுகி கோலம் முதலான அலங்காரங்கள் செய்யவேணும். இந்தமாதிரி செய்யப்படும் கிருஹத்தில்,

[illegible] ॥
[illegible] ॥

என்கிற வ்யாஸ வசனப்படி, லக்ஷ்மீயானவள் தன் பூர்ண கலைகளோடு வாசம் செய்கிருள். பிறகு யதோசிதமான இடங்களில் பூமியில் செத்தை முதலானதுகளையிட்டு, அதின்மேல் பகற்காலத்தில் வடக்குமுகம், ராத்திரியில் தெற்குமுகம் என்னும் நியமங்களுடனும், பசு, தேவாலயம், காற்று, அசுவத்தம் அதாவது அரசமரம், ஆலமரத்து நிழல், துளஸிச் செடி ஸமீபம், இவைகளுக்கு அபி முகமாகவுமில்லாமல், மௌனமாக விண்மூத்ரோத்ஸர்ஜநம் செய்யவேணும். பிறகு கைப்பில் வேரு மண்ணுடன், குளக்கரைக்குப்போய், செம்பில் ஜலமெடுத்து கரையில் சௌசம் செய்வது உத்தம பட்சம். குளத்தின்கரையில் ஜலத்திற்கு ஒரு சாண் தூரமிருந்து சௌசம் செய்வது மத்தியமம் என்கிற நியமப்படி. 15 தடவை மண்களினுல் சௌசம் செய்யவேண்டும். முதல் தடவை, ஒரு சிறங்கைமண்ணும் 2 தடவை அதில் பாதியும், பிறகு ஒரு பெரிய நெல்லிக்காயளவும் மண்ணிருக்கவேண்டியது. கைகள் முழங்கால்களுக்கு நடுவில் இருக்கவேண்டியது. வலது கையால் மண்ணை எடுத்து இடது கையால் போடவேண்டியது. நடுவில், மூன்றுதரம் வலது கையால் மண்ணை எடுத்து இடது கையால் போட்டு இடது கையை சுத்தம் செய்துகொண்டு பிறகு மறுபடி சௌசம் செய்யவேண்டும். இந்தப்பிரகாரம் 15 தடவையானபிறகு வலது கையால்

நெல்லிக்காயளவு மண்ணெடுத்து இடது கையை 20 தடவை சுத்தம்செய்து பிறகு அவ்வளவு மண்ணினால், 7 தடவை கால்களையும், பிறகு 20 மண்களால் இரண்டு கைகளையும் சுத்திசெய்துகொள்ளவேண்டும். இது பகலில் சௌச விதி; ராத்திரியில் இதில் பாதி போருமென்பதும், மார்க்கங்களில் போகும் போதும், ஆபத்காலங்களிலும், பாதி போருமென்பதும் சாஸ்திரம். மனு ஸ்மிருதி முதலானதுகளில், இன்னும் குறைத்தும், சிலதுகளில், நாற்றம் போகுமளவும் செய்யும்படியாகவும் விதியிருக்கிறதுகள். மூத்ர சௌசத்துக்கு, மூன்று மண்களும், கைகளுக்கு மூன்று மண்களும் விதிக்கப்பட்டிருக்கிறதுகள். இந்தப்பிரகாரம் சௌசம் செய்துவிட்டு, கைகளை முழங்கை பரியந்தமும் கால்களை முழங்கால்பரியந்தமும் அலம்பி கை நகங்கள் இடுக்குகளில் இருக்கும் அழுக்குகளையும் அலம்பிவிட்டு கரையோரமாகவிருந்து இடதுபுறமாக கரையில் விழும்படி 12 தடவைகள் வாய் கொப்பளிக்கவேண்டும். ஜலத்தில் துப்பக்கூடாது. சிலர்கள் இடது கையில் துப்பிகொள்ளுகிறார்கள். அது அசாஸ்திரீயம். பிறகு ஆசமனம் செய்துவிட்டு, மாவிலை, ஆல் முதலிய துவர்ப்பான குச்சிகளால் பல் துலக்கவேண்டும். சதுர்த்தசி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, பிரதமை, ஞாயர், செவ்வாய், வெள்ளி, சனி, மூன்றுவிதமான ஜன்ம நட்சத்திர தினங்கள், பௌர்ண அமாவாஸ்யை வ்யதீபாதம், இந்த தினங்களில் குச்சி கூடாது. மண், சாம்பல், செங்கல் இதுகளால் பல் துலக்கக்கூடாது. பல் துலக்க ஒன்றும் கிடைக்காதபோதும், சில விசேஷ உபவாஸ விருதாதி தினங்களிலும், வயோஷி ஸஹதஜ்னூ ஷூஹ ஊ்தமு ஸம்வ்யா என்கிற ஸாகூதஸம்ஹிதா வசனப்படி வாயில் ஜலத்தைவிட்டு 12 தடவை, விரலால் நன்றாய்ப் பல்லைத் தேய்த்து அலம்பவேண்டும். பிறகு அந்தக் குச்சியை அலம்பி பல்லால் கடித்தபடியே இரண்டாகப் பிளந்து நாக்கை வழித்துவிட்டு தூர எறிந்துவிட்டு கரையில் உட்கார்ந்தபடியே, இடது பக்கத்தில் 16 தடவை வாய் கொப்பளிக்கவேண்டும். பிறகு ஆசமனம் செய்து, ஜலத்தில்போய் திருவஷ்டாக்ஷரத்தை உச்சாறணம் செய்துகொண்டும் கங்கை முதலிய தீர்த்தங்கள் அங்கு வந்திருப்பதாக தியானித்துக்கொண்டு ஸ்நாநம் செய்யவேண்டும். ஸுமங்கலி ஸ்திரீகளுக்கு எப்பொழுதும், ஊரிரஸம் ஸாயாகூ. என்கிற வசனப்படி சிரஸ்நாநம் விதிக்கப்படாததால் கண்டஸ்நாநமும் விதூகாய-ராய-மான விசேஷ தினங்களிலும் பர்த்தாவின் அனுமதிப்படி வ்ரதோபவாஸம் செய்ய வேண்டிய தினங்களிலும் ரதிமூநீஸகுகூா மௌவம வரகிவிஷெம்வெத, என்கிற ஆபஸ்தம்ப ஸூத்திரப்படிக்கு, புருஷஸம்ஸர்கம் செய்தபிறகும் சிரஸ்நாநம் செய்யவேண்டும். பிறகு ஈர வஸ்திரத்தை களைந்துவிட்டு இடுப்புக்கு ஒன்றும் மேலுக்கு ஒன்றும் புருஷர்களைபோல் தரித்துக்கொள்ள வேண்டும், அதாவது இடுப்பில் கச்சத்துடன் ஒரு வஸ்திரம் இடது பாகத்

தில் ஆரம்பித்துப் பிரதட்சிணமாகவும், மேல் உத்தரீயம் உபவீத ஸ்தானத்தில், அதாவது வாஸொவா ஊக்ஷிணத உவவீய, என்றும், உவவீதெ.தா நாஐ வஸுூஂவெவாவொவிநூவ விஶேஷஃ என்று, ஸவ்ருதி யஜ்ஞா வவீதம் என்று சொல்கிறபடி இடது தோளில் புருஷர்கள் பூணூல் தரித்திருக்கிறமாதிரி தரிக்கவேண்டும். இதற்கு அங்யதாவாக ஒத்தை வஸ்திரத்தையே கீழும் மேலும் தரிப்பதற்கும், வலது தோளில் பிராசீனவீதமாக தரிக்கிறதற்கும், பிரமாணம் தேடிப் பார்க்கவேணும். பிறகு ஊமவஹ்ா டீா க்ருதியான புண்டரங்களையும், ஸ்ரீசூர்ணத்தையும், கேசவாதி நாமங்களையும், ஸ்ரீ தேவ்யாதி நாமாக்களையும் சொல்லிக்கொண்டு தரிக்கவேண்டும். வேருவிதமானபுண்ட்ரங்கள் கூடாது. சூரியனைப்பார்த்து மனஸால் பகவானை தியானித்துக்கொண்டு மூன்றுதரம் ஜலத்தை இரண்டு கைகளாலும் அள்ளி கடைவிறல்கள் இரண்டையும் தனியாக ஒதுக்கிவிட்டு மந்திரமில்லாமல் அர்க்கியம் ஸமர்ப்பிக்கவேண்டும். எப்போதும் ஸ்திரீகள் சூரியோதயத்திற்கு முந்தி ஸ்நாநம் செய்யக்கூடாது. அல்ப த்வாதசி முதலான விசேஷ தினங்கள் நீங்கலாக).பிறகு பர்த்தா ஔபாஸனம் செய்யவேண்டியதற்காக அக்கினி கிரஹம் முதலானதுகளை சோதித்து தான் அக்கினிமூட்டி, புஷ்பம் அக்ஷதைகளால் அக்கினியை அர்ச்சித்து, பர்த்தாவினால் ஹோமம் செய்யப்பட்டபிறகு, அக்கினி அணையாமலிருக்கவேண்டிய ரக்ஷையைச் செய்ய வேண்டும்.

(இன்னும்வரும்.)

ஸ்ரீः.

போக்த்ராபத்ய திகரணம்.

(ஸ்ரீ. உப வே. அன்பில் கோபாலாசார்யர், எம். ஏ; பி. எல்.)

கொஶஹாஜா என்கிற பாடத்தை அவலம்பித்து கொஶஂ என்பதற்கு வாஹுகொஉவம என்கிற அர்த்தம் பிரஸித்தமாயிருப்பதையும் "கொமெஶா வஸஂ ஹஹண உெஷு்ரு ஹிருவாணாஃ" என்கிற ஸங்கல்ப ஸூர்யோதய ச்லோகத்தில் ஹ்ஂயராஶி என்னும் அர்த்தத்தில் ப்ரயோகிக்கப்பட்டிருப்பதையும் உத்தேசித்து வேதவ்யாஸரென்றும் வேதாசார்யரென்றும் ப்ரஸித்தமான ஸூத்ரக்காரரை ச்ருதிகளுடைய ஹ்ஂயராஶியை உடையவர் என்றும் ஶ்ரூதீநாஂ கொஶஹாஜா என்கிற இரண்டு பதங்களால் நிர்தேசித்ததாகச் சொல்லலாம். ச்ருதிகளுடைய ஏகதேசத்தால் தோன்றக்கூடிய ஆவாதவூதீத அர்த்தத்தை ஊாஷூுவாரஃஶூத்தால் ஏற்படும் அர்த்தத்தால் மாற்றிக்கொள்ளவேணும் என்று மீமாம்ஸகர்கள் சொல்வார்கள். எல்

லாச்ருதிகளுடைய பராமர்சம் ஸூத்ரக்காரரைவிட ஒருவருக்கும் அதிகமாக இருப்பது ஸம்பாவிதம் அல்லாதபடியாலும், ஆநந்தமயாதிகரண விஷயத்தில் ஸ்ரீமத்வ்யாஸராய ஸ்வாமிகளுடைய சந்திரிகா க்ரந்தத்தில் ஸூத்ரக்காரருடைய வ்யாக்யாநத்தை மாற்றி ஸ்வகல்பிதவாத பரமாக சிலர் நயனம் செய்வதைப் பரிஹஸித்து "அஹோ ந ஸர்வாதிசாயீ ஹி ஸூத்ரக்ருதோ மதிதம் । கஷ்டம் ப்³ருஹத்வம் த்வயா ஜ்ஞாதம் ந்யாயவேதிநா" ॥ என்றுசொல்லி இருக்கும் ந்யாயத்தைக்கொண்டும் இப்படி அர்த்தம் சொல்வது உசிதமாகலாம்.

கோசஸஹஸ்ரம் ச்ருதீநாம் என்கிற பாடத்தையே அவலம்பித்தாலும் கோசப்ரதிபாதகமான அதாவது சரீர வர்ணிவாசகமான ச்ருதிகளுக்கு "ஒரு அம்சத்தில் ஸாம்ய மிருக்கையிலும் மற்ற அம்சங்களில் வைஷம்ய மிருப்பதில் தாத்பர்யத்தைக் கண்டுகொண்டு" என்று அர்த்தம் சொல்லலாம். கோசம் அல்லது சரீரவிஷயமான ச்ருதிகள் ஸ்வயம் தாங்களும் கோசம் அல்லது ஆவாணமுடையதுகளாய் நிரவகாஹி ரூபமாய் இருக்கின்றதென்று வேடிக்கையாய் த்வநிக்கிறதென்றும் சொல்லலாம். அப்படி நிரவகாஹி ரூபமான ச்ருதிகளுடைய உள்ளபிப்ராயத்தை ந்யாயத்தால் வெளியில் ப்ரகாசிக்கும்படி செய்வதே மீமாம்ஸா ஸூத்ரக்காரர்களுடைய உபகாரம். ஜைமிநிமஹர்ஷிக்கு மங்களாசரணம் செய்யும்பொழுது "நமோ வேதவேதாந்த நிரவகாஹி விஸ்தாரயித்ரே ந்யாயப்ரஜ்ஞித வேதவே" என்று த்ரமிடபாஷ்யகாரர் ஸாதித்திருக்கிறார். ஆவ்ருததாத்பர்யமாயிருக்கிற கோசவிஷய ச்ருதிகளுக்கு ந்யாயத்தால் வாஸ்தவ தாத்பர்யத்தை அறிந்துகொள்ள வேண்டியது உசிதமாகும். கோசம் என்பது புவநம் அல்லது அண்டத்தைச் சொல்லலாம். "புவந கோசஸ்ய மத்யே" என்று த்ரமிடபாஷ்ய ஸூக்தியுமிருக்கிறது. அம்ஹாம்ஸ வர்த்திகளான ப்ருஹ்மருத்ரர் முதலிய ஸகல ஜீவர்களையும் ஸங்கிரஹிப்பதாக கோசஸஹஸ்ரம் என்பதற்கு அர்த்தமாகக்கொள்ளலாம். அப்பொழுது ஜீவகோடி ஈச்வரகோடி என்கிற இரண்டையும் ஸங்கரஹிக்காமல் ஜீவராசிகளைமட்டும் வாங்கிக்கொண்டு அவர்களுக்கு ப்ரக்ருதமான ப்ரபுவோடு ஸாம்ய வைஷம்யங்களைத் தெரிந்துகொண்டு என்று அர்த்தம் சொல்லலாம். இப்படி அர்த்தம் சொல்வதில் ச்ருதாநாம் என்று பாடத்தை வைத்துக்கொண்டால் அத்தோடு ஸமாநாதிகரண்யமாயந்வயிக்க அநுகூலமாயிருக்கும். ப்ருஹ்மருத்ர ப்ரவாஹங்கள் என்று அதிகரண சிந்தாமணியில் ப்ரவாஹசப்தம் ப்ரயோகித்திருப்

பதும் ஆநந்த மயாதிகரண ச்ருதப்ரகாசிகையில் "ஸம்ஸாராம் விகதா யானாம் யதாவஸ்திதி வாஸவே । ஸத்யா ஸமயிதாம் ஹோகே நவ்யதீதாஸ் விதாரஸாம் ॥ ஊத்யாதிபிஃ ஸம்ஸாரம் தத்ர தத்ர வதாந்தவா நாம்ச ஸம்வேத்ய கூலவதாக நியாத்ய நியந்தா: ஸதஸ்ர ணாநாம் கேவ லயிதேத வதாந்தாந்வேஷ்யா ஸ்வஸம்வேத்யாதெஷ்யஃ ஸதஸ்ரணாநாம் தயா ஸவமதஸ்ய ஸமவ ஃ ஸவரித்திநாநாம் ஸ்யம் ஸம்ஹ்ஷ்விஸஃ" என்று உபபாதித்திருக்கிறபடி அநந்த அண்டங்களிலுள்ள கணக்கிலடங்காத ப்ருஹ்மருத்ரர்களைத் திருவுள்ளம் பற்றினது என்று சொல்லலாம்.

கேசஸஹஸ்ர ச்ருதீநாம் என்று பாடம் இருந்திருக்கலாமென்றும் சொல்லலாம். அப்படி பாடமானல் ச்ருதீநாம் கேசஸஹஸ்ர என்பது ஸத்ரஸ்ர ஸ்திரீணாம் என்பதோடு ஸமாநாதிகரணமாக அன்வயிக்கிற விசேஷஸ்வாரஸ்ய முண்டு. உபநிஷதாதி கேசமில்லாமலிருக்கும் ச்ருதிகளாகிய ஸ்திரீகளின் கேசங்களை இந்த ந்யாயம் அடைந்து அலங்கரிக்கிறதென்றும் ச்ருதிகளுடைய கேசபாசத்தில் ப்ரகாசிக்கிறதென்றும் ச்ருதிகளுடைய விகல்பபந்தங்களை கேசாம்ஸ்ரகைபோல் அடைந்து சிடுக்கு எடுத்துவிட்டு பரிஷ்கரிக்கிறதென்றும் ச்ருதிகளுடைய கேசங்களுக்கு தேவ வ்யாஹதியால் அபாயம் வராமல் ரக்ஷிக்கிறதென்றும் பலவிதமாக கேசஸ்தாநத்தை தான் அடைந்து இந்த நீதியான ஸ்திரீ உபகாரம் செய்கிறது. ஸ்ரீபாஷ்யக்காரருடைய ச்ருதிவ்யாக்யாந ரூபமான ஸ்ரீ ஸூக்திகளைப்பற்றி "ச்ருதியாவர சிரோலங்கரணம் ஸாஷம்ஸம்" என்றும் "விமல ஸரஸ்வதீ விகல்பவம்ய கேசாம்ஸ்ரகா:" என்றும் "நயோஸ்வேஷ ஸநாதந ச்ருதிவதூ வேதவ்யா வேதவ்தீஷு வ்யாஷீ ஸம் நயவஜ்ரதிம யதிபதிஃ வ்யாவீகரஸ" என்றும் கொண்டாடி இருப்பது இப்படி பாவம் சொல்வதற்கு அநுகூலமென்றும் ஸ்ரீதேசிகன் திருவுள்ளத்திற்கு ஒத்திருக்கலாம் என்றும் ஸஹ்ருதயர்கள் அங்கீகரிக்கக்கூடியது. மூன்றுமூர்த்திகளில் மற்ற இரண்டு மூர்த்திகளிடத்தில் பாவமுள்ளதாக வ்யாக்யானம் செய்தால் வைவர்ண்ய துக்கத்தை அநுபவிக்கும் ச்ருதி வதூக்களுக்கு ஜீவஸாமாந்யமும் வாஸுதேவோடு ஒன்றென்றும் எல்லா ஜீவர்களிடத்திலும் ச்ருதிகளுக்கு நாயகனிடத்திற்போல பாவமிருப்பதாக வர்ணிக்கும் பூர்வபக்ஷத்தினல் ச்ருதிகளுக்கு அளவிடக்கூடாத துக்கம் உண்டானபொழுது அந்ததுக்கம் இந்தந்யாயத்தால பரிஹரிக்கப்பட்டு ச்ருதிகளுடைய கேசங்களையும் நிலைநிறுத்தி சிரகாலமாயிருந்த சிடுக்குகளை அவிழ்த்து ஹார்தமான பாவத்தை இந்த ப்ராசீனமான நீதி வெளிப்படுத்துகிறது.

சிந்தாமணி வ்யாக்யாநத்தை கவனித்துப் பார்த்தால் கோஶ என்பதற்குப் பதிலாக கேஶ என்று ஆதிபாடம் இருந்திருப்பது ஸம்பாவிதமென்று சொல்லலாம். ஆனால் கோஶஹாஜா என்றுபாடம் இருந்ததை கோஶஹாஜாம் என்று சிந்தாமணிக்காரர் திருவுள்ளம் பற்றி இருக்கலாம். க சப்தத்தை [illegible] பரமாக அர்த்தம்செய்வது சிந்தாமணியின் வழி. [illegible] என்கிற [illegible] நத்தில் [illegible] யில் கஃ என்பது [illegible] வைச் சொல்லுவதாக [illegible] செய்யப்பட்டிருக்கிறது. அப்படி வ்யாக்யானம் செய்ய யாதொரு நிர்பந்தமும் மில்லாதிருந்தும் அந்த வ்யாக்யதாவின் மனோதர்மம் கஶப்தத்தை [illegible] பரமாக அர்த்தம் சொல்லுவதை வழக்கமாக உடையது என்பதற்கு அடையாளமிருக்கிறது. அதை ஆலோசித்தால் அந்த ஸ்வாமிகடாக்ஷித்திருக்கிற பாடம் கேஶ என்று இருந்திருக்க வேண்டுமென்று சொல்லலாம். ஆனால் கஶப்தத்திற்கு [illegible] வென்றும் [illegible] ஶப்தத்திற்கு [illegible] வென்றும் அர்த்தம் செய்துகொண்டு விட்டபடியாலும், அப்படி அர்த்தம் செய்துகொண்டால் [illegible] என்பதோடு ஸமானாதிகரணமாக அந்வயிப்பது அஸாத்தியமானபடியால் அநுஸ்வாரத்துடன் பாடம் வைத்துக்கொண்டு அவ்யவஹிதோத்தரமான [illegible] ஶப்தத்தோடு ஸமானாதிகரணமாய் ஷஷ்ட்யந்தமாக அந்வயிக்க வேண்மென்று திருவுள்ளம் பற்றி இருக்கக்கூடும்.

கேஶஹாஜாம் [illegible] என்று வாம் மானாலும் கூந்தல்களையுடைய அதாவது [illegible] களான ச்ருதிகளுக்கு என்று அர்த்தம் சொல்லலாம். ஜீவர்களெல்லாரையும் [illegible] னைவிட வேறல்லாதவர்களாக ஆக்க பூர்வபக்ஷி சொல்லும்பொழுது ச்ருதிகளை அமங்கலிகளாக ஆக்கவே அவன் முயலுகிறான். அப்படி அமங்கலிகளாக ஆகாமல் இந்த ந்யாயபலத்தால் ஜீவேச்வரர்களுக்குள் விபாகம் அல்லது வைஷம்யத்தில் தாத்பர்யம் நிரூபிக்கப்படுகிறது. பூர்வபக்ஷம் ஸ்திரப்பட்டு விட்டால் ச்ருதிகள் விகேஶிகளாய்விடும்.

க்லேஶஹாஜாம் என்றுபாடமானாலும் க்ரோஶஹாஜாம் என்று பாடமானாலும்; ஜீவேஶ்வரமர்யாதையை அழித்துப் பூர்வபக்ஷி ஒன்றாகச்செய்து விடக்கருதி கட்டினவுடனே அபலைகளான ச்ருதிகள் க்லேஶம் (துக்கம்) அல்லது க்ரோஶம் (அழுகை) யை அடைந்துவிடவே இந்த ந்யாயம் விபாகத்தில் தாத்பர்யத்தை ஏற்படுத்தி பூர்வபக்ஷியை அடக்குகிறது. எப்படி அர்த்தம் பண்ணினாலும் ஸித்தாந்த விரோதமில்லை.

ஸ்வாரஸ்ய அஸ்வாரஸ்யங்களை ஸஹ்ருதயர்கள் யதாருசி பராமர்சித்துக் கொள்ளவேணும்.

ஸ்ரீ:

பத்ராதிபரின் குறிப்புகள்.

மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமி.

நமது ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபைக்கு அதை ஆரம்பித்தது முதல் நாளிதுவரையிலும் உபந்யாஸங்களால் உபகரித்தும் நமது வேதாந்ததீபிகைக்கு ஆரம்பம் முதல் நாளிதுவரையிலும் விஷயப்ரதானம்செய்து உபகரித்துவரும் பண்டிதபூஷணம் பகவத்விஷயம் ஸ்ரீ. உப. வே. சேட்டலூர் ஸ்வாமிக்கு நமது பாரதவர்ஷத்தை ஆண்டுவரும் ஸார்வ பௌமனான சக்ரவர்த்தியால் அந்தஸ்வாமி நமது ஸமூஹத்துக்கும், ஸித்தாந்தத்துக்கும், தேசத்துக்கும் செய்துவரும் உபகாரங்களைக்கண்டு பஹுமானித்து, தாம் பஹுமானித்ததற்கு அடையாளமாக மஹா மஹோபாத்யாய என்னும் பிருதை தம்முடைய ஜன்ம திவஸத்தன்று கொடுத்த ஸமாசாரம் அநேகமாய் எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம்.

இந்த ஸ்வாமி ஸ்ரீபாஷ்யகாரரால் ஏற்படுத்தப்பட்ட எழுபத்திநாலு ஸிம்ஹாஸநாதிபதிகளில் ஒருவராகிய சேட்டலூர் ஆச்சானின் திருவம்சத்தில் அவதரித்து, புராணப்ரஸங்கத்தில் அத்விதீயரான ஸ்ரீ. உப. வே. நாதாசார்யர் என்னும் மஹானின் இரண்டாவது குமாரராகிய ஸ்ரீ. உப. வே. வித்வான் ராமாநுஜாசார்யருடையத் திருக்குமாரராக அவதரித்து, ஸாமான்ய சாஸ்த்ரங்களை தம்முடைய தகப்பனாரிடமிருந்து அப்யஸித்து, பிறகு தம்முடைய பாட்டனாருக்கு ஸஹோதரரான துரீயாச்ரமத்தை அலங்கரித்த மஹாமஹாவித்வானான பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகன் என்னும் மஹானின் திருவடிகளை ஆச்ரயித்து, பஞ்சஸம்ஸ்காரங்களையும் உபய வேதாந்த ரஹஸ்யாதிகளையும் உபதேசம்பெற்று, அந்தஸ்வாமியும் இவர் லோகாசார்யராய் எழுந்தருளி இந்த லோகத்தை உபதேசத்தாலும் க்ரந்த முகமாகவும் சீர்திருத்திப்பணிகொள்ள வேண்டுமென்று திருவுள்ளத்தாலே ஸ்ரீ அப்புள்ளார் நம் ஸ்வாமி ஸ்ரீதேசிகனைப் பழக்கிவைத்தால்போல் ஸகல ரஹஸ்யார்த்தங்களையும் பரமக்ருபையுடன் உபதேசித்து நீ நல்ல ஆசார்யனாவாய் என்று அநுக்ரஹித்து, அந்த அநுக்ரஹபலத்தாலே ஸாமான்ய சாஸ்த்ரங்களிலும் உபய வேதாந்தங்களிலும் அஸாதாரணமான பாண்டித்யத்தை அடைந்து, தமிழ் பாஷையிலும் அத்விதீயமான ப்ராவீண்யத்தை ஸம்பாதித்து, தமிழ் நூல்களையும் ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகளையும் ரஸத்துடன் அநுபவிக்கும்படி கற்று [illegible] என்று ச்லோகம் சேரவில்லை என்று ச்ரமப்பட்ட

காலத்தில் தம்முடைய பெண்ணினால் பதத்தை மாற்றிவிட்டால் ஸரியாகும் என்றுசொல்லப்பட்ட தர்க்க வாசஸ்பதியான அன்னம்பட்டரைப் போலில்லாமல் ஸாஹித்யத்திலும் பூர்ண பாண்டித்யத்தை சம்பாதித்தார்.

இந்த லோகத்தை திருத்திப் பணிகொள்ள திருவுள்ளம்பற்றி பகவான் லோகத்தார்களை பகவத்பக்தி செய்யும்படி தூண்டவேண்டியதன் பொருட்டு கானரஸத்தால் ஆகர்ஷிக்க பாஞ்சஜன்யத்தை பொய்கை ஆழ்வாராகவும், இவ்விதம் ஆவர்ஜனம்செய்யப்பட்டவர்களுக்கு நிச்சயஜ்ஞானம் உண்டாக வேண்டியதற்காக கௌமோதகீ என்னும் நித்யஸூரியை பூதத்தாழ்வாராகவும், இவ்விதம் ஸம்சயமில்லாத ஜ்ஞானம் உண்டானாலும் அது ஸம்சயமற ப்ரதிஷ்டிதமில்லாமற் போனால் குயுக்திகளால் கலக்கப்பட்டுவிடுமே என்று அவரவர் வாதங்களை நிராஸம் செய்யக்கூடிய சக்தியையுடைய நந்தகத்தை பேயாழ்வாராகவும் அவதரிப்பித்து, ஒருவர்பாடி ஜனங்களை ஆகர்ஷிக்கவும், மற்றொருவர் ஜ்ஞானோபதேசம் செய்யவும், இன்னும் மற்றொருவர் அந்த ஜ்ஞானத்திற்கு நிஸ்ஸம்சயமான ரூபத்தை உண்டாக்கி லோகத்தை திருத்தினாற்போல் இந்த மூன்றுகார்யங்களையும் இந்த ஸ்வாமி ஒருவராலேயே செய்துவைக்க வேண்டுமென்று, சங்கீத சாஸ்திரத்தில் நிகரற்ற பாண்டித்யத்தையும் நமது விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தில் அத்விதீயமான ஞானத்தையும் அனுக்கிரஹம் செய்து, செவிக்கினிய செஞ்சொல்லால் கேட்போர் ஆபாலவ்ருத்தம் மனமுருகும்படி அம்ருததாரையை வர்ஷிக்கும்படி சக்தியைக்கொடுத்து, லோகத்தை காப்பாற்ற வேண்டுமென்று பகவானுடைய ஸங்கல்பம். இந்த நியமனத்தை தலைக்கட்டிவைக்கவேண்டியதற்காக தம்முடைய ஜன்ம பூமியான திருவஹீந்திரபுரத்தை விட்டு எல்லோரும் உஜ்ஜீவிக்க வேணுமென்று இந்தப்பட்டணத்துக்கு இருபதுவருஷங்களுக்குமுன் எழுந்தருளி அன்றுமுதல் இன்றுவரை பகவானுடைய நியமனத்தை கொஞ்சம்கூடத் தவறாமல் உபதேச முகமாகவும் க்ரந்தங்களின் ப்ரசாரணங்களினாலும் நடத்திவருகிறார். இந்த மஹானால் செய்யப்பட்டு வரும் உபகாரங்களை நினைத்தால் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனுடைய அபராவதாரம் என்று சொல்ல என்ன தடை?

இந்த ஸ்வாமியிடம் காலக்ஷேபம் செய்து ஸ்வரூபம் அறிந்தவர்கள் அநேகர். இந்த ஸ்வாமி சிலவற்றை மூலக்ரந்தங்களாகவும், நமது பூர்வாசார்யர்களின் திவ்ய ஸூக்திகளில் சிலவற்றை விமர்சித்தும், சிலதுகளுக்கு வ்யாக்யானம் செய்து அருளியும், சிலவற்றை தமிழில் மொழிபெயர்த்தும், தமக்கு ஒருவிதமான ப்ரயோஜனமில்லாமலிருக்கச் செய்தேயும் நம்முடைய ஸித்தாந்த ஸ்தாபனார்த்தமாக இதுவரையிலும் 67 க்ரந்தங்களை அருளிச்செய்திருக்கிறார்.

இதுவரையிலும் வெளியிடப்பட்டிருக்கும் க்ரந்தங்களாவன:—

மூலக்ரந்தங்கள்.

1. ஸதாசார பரித்ராணம்.
2. ஸ்ரீ ஸத்ஸம்ப்ரதாய விவேகம்.
3. உபயவேதாந்த ஐககண்டயம்.
4. ஆழ்வார்வைபவமும் திருவாய்மொழியின் பெருமையும்.

பரிஷ்கரிக்கப்பட்டு அச்சிடப்பட்டவைகள்.

5. ஸ்ரீபாஷ்யம்.
6. ஸ்ரீமத் பகவத்கீதை.
7. ஸ்ரீதாத்பர்ய சந்திரிகை.
8. ஸ்ரீபாகவதம்.
9. வேதாந்தஸாரம்.
10. வேதாந்த தீபம்.

விமர்சங்கள்.

11. தத்க்ரதுந்யாய விசாரம்.
12. ஸ்ரீபாகவத தனிச்லோகீ.
13. புரஞ்ஜனோபாக்யானம்.

வ்யாக்யானங்கள்.

14. ஸ்ரீவைஷ்ணவ தினசரி.
15. குருபரம்பரா ஸாரம்.
16. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்.
17. பெரியதிருமொழி பதவுரை.
18. பெரியதிருமொழி பரகாலஹ்ருதயம்.
19. மும்மணிக் கோவை.
20. அம்ருதரஞ்ஜநீ.
21. நவரத்னமாலை.
22. திருமந்திரச்சுருக்கு.
23. த்வயச்சுருக்கு.
24. சரமச்லோகச்சுருக்கு.
25. அர்த்தபஞ்சகம்.
26. திருச்சின்னமாலை.
27. பன்னிருநாமம்.
28. அடைக்கலப்பத்து.
29. ப்ரபந்தஸாரம்.
30. ஆஹாரநியமம்.
31. ஸம்ப்ரதாய பரிசுத்தி.
32. ஸ்ரீமத் தத்வபதவீ.
33. ,, ரஹஸ்யபதவீ.
34. ,, தத்வநவநீதம்.
35. ,, ரஹஸ்ய நவநீதம்.
36. ,, தத்வமாத்ருகை.
37. ,, ரஹஸ்யமாத்ருகை.
38. ,, தத்வஸந்தேசம்
39. ,, ரஹஸ்யஸந்தேசம்.
40. ,, ரஹஸ்ய ஸந்தேச விவரணம்.
41. ,, தத்வரத்னாவளீ.
42. ,, தத்வரத்னாவளீப்ரதிபாத்யரஹஸ்யம்.
43. ,, ரஹஸ்யரத்னாவளீ.
44. ,, ரஹஸ்யரத்னாவளீ ஹ்ருதயம்.
45. ஸ்ரீபரமபத ஸோபானம்.

தமிழ்மொழிபெயர்ப்புகள்.

46. ஸ்ரீமத் பகவத்கீதை.
47. ,, பாஷ்யம்.
48. ,, தாத்பர்ய சந்திரிகை.
49. கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷை.
50. கீதார்த்த ஸங்க்ரஹம்.
51. கீதார்த்த ஸங்க்ரஹ பாட்டுகள்.
52. சதுச்லோகீ.
53. ஷை பாஷ்யம்.
54. ஸ்தோத்ரரத்னம்.
55. ஷை பாஷ்யம்.
56. ப்ருதுகத்யம்.
57. ஷை பாஷ்யம்.
58. ஸ்ரீரங்ககத்யம்.
59. ஷை பாஷ்யம்.
60. ஸ்ரீவைகுண்டகத்யம்.
61. ஷை பாஷ்யம்.
62. நித்யம்.
63. ரஹஸ்யத்ரய ஸாரஸங்க்ரஹம்.
64. ஸச்சரித்ர ரக்ஷை.
65. ஸங்கல்ப ஸூர்யோதயம்.
66. சததூஷணீ.
67. ஸந்த்யாவந்தன பாஷ்யம்.

சென்ற 20 வருஷங்களாக இவ்விதம் ஒரு கைங்கர்ய புத்தியால் செய்துகொண்டுவரும் இம்மஹானுக்கு இப்போது ராஜாங்கத்தாரால் செய்யப்பட்ட பஹுமானம் வெகுகாலத்துக்கு முன்னாலேயே லபித்திருக்கவேண்டும். ஆனால் ஒருவர் ப்ரஸித்தனாக இருந்தால் அவருடைய க்யாதி அவருடைய ஜீவன காலத்தில் ஜனங்களுக்குத் தெரிகிற வழக்கமில்லை. அவருடைய பிற்காலத்தில் பெருமை வெளிப்படுத்துவது வழக்கம். லோக சரித்ரங்களை கவனித்தால் ஸாக்ரடீஸ் என்னும் மஹா வித்வான் தம்முடைய வைதுஷ்யத்தை அறியாத ஜனங்களால் கொலை செய்யப்பட்டார். அரிஸ்டாடில் என்பவர் தம்முடைய ஊரிலிருந்து தமக்கு பாண்டியத்யமிருந்ததால் பஹிஷ்காரம் செய்யப்பட்டார். இது நம்முடைய பூர்வர்களுடைய சரித்திரத்தில் நன்றாய் விளங்கும். கவிகுலதிலகரான காளிதாஸன், பவபூதி இவர்கள் எவ்விதம் தங்களுடைய காலத்தில் கஷ்டப்பட்டார்களென்று நாம் கேழ்க்கவில்லையா? இல்லாவிட்டால்,

'𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵 𑌨 𑌸𑌾𑌧𑍁 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌨 𑌚𑌾𑌪𑌿 𑌕𑌾𑌵𑍍𑌯𑌂 𑌨𑌵𑌮𑌿𑌤𑍍𑌯𑌵𑌦𑍍𑌯𑌮𑍍 ।
𑌸𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌤𑌰𑌦𑍍𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 𑌮𑍂𑌢𑌃 𑌪𑌰𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌨𑍇𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 ॥'
𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌸𑍍𑌯𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑌿 𑌮𑌮 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌸𑌮𑌾𑌨𑌧𑌰𑍍𑌮𑌾 ।
𑌕𑌾𑌲𑍋 𑌹𑍍𑌯𑌯𑌂 𑌨𑌿𑌰𑌵𑌧𑌿𑌰𑍍𑌵𑌿𑌪𑍁𑌲𑌾 𑌚 𑌪𑍃𑌥𑍍𑌵𑍀 । என்றும்

ஏன் இம்மாதிரி இவர்கள் சொல்லவேண்டும்? இப்பொழுது அவர்களுடைய க்ரந்தங்களை பிள்ளைகளுக்கு படிக்கும் புஸ்தகங்களாக ஏற்படுத்தி இருக்கிறார்

கள். முன் காலத்தில் அவைகளைத் தேடுவார் இல்லாமலிருந்தன. இவ்விதம் பெரியோர்களுடைய துக்கத்தை ஒரு அபியுக்தர் பின்வருமாறு கூறியுள்ளார்.

𑌸𑍍𑌵𑌨𑍇𑌦𑌿𑌷𑍍𑌠𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌜𑌗𑌤𑌿 𑌸𑌮𑌕𑌾𑌲𑌃 𑌕𑌵𑌯𑌿𑌤𑌾
𑌨𑌿𑌜𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌂 𑌨𑌿𑌜𑌭𑌵𑌨𑌵𑍀𑌥𑍀𑌷𑍍𑌵𑌪𑌿 𑌲𑌤𑌾 ।
𑌜𑌗𑌤𑍍𑌖𑍍𑌯𑌾𑌤𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌸𑌕𑌲𑌸𑍁𑌲𑌭𑍋 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌵𑌿𑌧𑌿𑌃
𑌨 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 [illegible] ।

தனக்கு ஸமீபத்திலிருக்கும் (காவேரி கங்கை முதலான) புண்யதீர்த்தங்கள், தன்னுடன் ஒரேகாலத்தில் வஸிக்கும் கவி, தன்னுடைய ஸொந்த பார்யையின் அழகு, தன் வீட்டு வேலியிலிருக்கும் மருந்துக்காகும் கொடி, ஜகத்துக்கெல்லாம் ப்ரஸித்திபெற்ற மந்த்ரம், வெகு ஸுலபமாய் சுத்தி செய்யும் ப்ராயச்சித்தம், இவ்வளவும் அதிகப்பழக்கத்தால் குறைவான கௌரவத்துடன் ஜனங்களால் மதிக்கப்படுகின்றன. ஜனங்களுக்கு இவைகளில் கௌரவம் ஏற்படுகிறதில்லை.

உலகத்தில் ஒருவருக்குள்ள யோக்யதையை அறியவொட்டாமல் தடுக்கிறது நம்முடைய அஜ்ஞானமும் அஸூயையுமே. இந்த அஸூயைதான் வஸ்துஸ்திதி இன்னதென்று தெரியவொட்டாமல் ஆளை மயக்குகிறது. ஆகையால் “[illegible]” என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்தாரிறே? இந்த அபகுணம் மநுஷ்யர்களுக்கு ஜன்மசத்ரு. இதுவும் அநாதிகாலமாய் நம்முடன் கூட இருந்துகொண்டே வருகிறது. ஸ்ரீ தேசிகனுடைய காலத்திலும் இந்த கஷ்டமிருந்தது என்று வ்யக்தமாக ஏற்படுகிறது. அவரும் மிகவும் ச்ரமப்பட்டு தம்மை அஸூயை இல்லாத இடத்தில் வைக்கும்படி

[illegible] ।
[illegible] என்று

ஸ்ரீ ரங்கநாதனை ப்ரார்த்தித்தாரன்றோ.

இவ்விதம் நம்முடைய தேசத்தின் ஸ்வபாவமிருக்கச் செய்தேயும் இந்த ஸ்வாமியினுடைய யோக்யதையும், உலகத்துக்குச் செய்துவரும் உபகாரமும் ஸர்க்காருக்கு எட்டும்படி செய்து இந்த பிருதை அவர்கள் இந்த ஸ்வாமிக்கு அளித்தது மிகவும் ச்லாகிக்கத் தகுந்தது.

ஆனால் கவர்ன்மெண்டு வாஸ்தவத்தில் லோகோபகாரம் செய்கிறவர்களுக்கு இவ்விதப் பிருதுகள் கொடுத்து கௌரவப்படுத்துகிறது என்று ஒரு

நியமம் வைத்திருந்தபோதிலும், இந்த பிருதுகளுக்கு சிபார்சு செய்யும் பொழுது பிருதுகொடுப்பது சிபார்சு செய்யும் பெரிய மனுஷ்யர்களுடைய மனோபாவத்தைப் பொருத்ததாக இருக்கிறது. பெரிய மனுஷ்யர்களுக்கு மற்றவர்களிடம் எத்தனையோ விதத்தால் ப்ரீதி உண்டாகிவிடுகிறது. ப்ரீதி உண்டாகிவிட்டால் யோக்யதா அயோக்யதா விமர்சம் செய்யாமலே, சில ராஜ ஸதஸ்ஸில் ஜபதக்ஷிணைக்கு சீட்டுக் கேழ்க்கப்போகிறவனுக்கு தானுதிகாரி வித்வத் ஸம்பாவனை டிக்கட்டுக் கொடுப்பதைப்போல், அவரவர்களுக்கு ப்ரீதியுள்ளவர்களிடம் பிருதைக் கொடுக்கும்படி செய்துவிடுகிறார்கள். இவ்விதம் அஸ்தானங்களில் சிற்சிலகாலம் பிருதுகள் கொடுக்கப்பட்டு வந்துகொண்டிருக்கின்றன. இவ்விதம் அஸ்தானங்களில் தான் போய்ச் சேரவேண்டி இருக்கிறதே என்று சோகித்துக்கொண்டிருந்த இந்த மஹாமஹோபாத்யாய பிருது இப்பொழுது தகுந்த பாத்ரத்தை அடைந்து ‘யஷ்டிமே ஆஶ்ரீயதே’’ என்பதைப்போல் தன்னுடைய குறையைத் தீர்த்துக்கொண்டது.

இந்த ஸ்வாமிக்கு இந்த பிருதால் ஒருவிதமான யோக்யதை ஜாஸ்தி ஏற்பட்டதாக இல்லை. இல்லாதகாலத்தில் யோக்யதை குறைந்ததாகவுமில்லை. ஸூர்யனை ப்ரகாசப்படுத்த வேறு வஸ்து வேண்டுமா? ஆனாலும் பகவானை வாயால் சொல்லுவதில் வெரும் பகவான் பகவான் என்று சொல்லாமல் யாநி நாமாநி கௌணாநி விக்யாதாநி மஹாத்மந: என்னும்படி அவருடைய கணக்கில்லாத திவ்ய குணங்களால் அவரை எவ்விதம் ஸ்தோத்திரம் செய்கிறோமோ அதேவிதமாய் இந்த ஸ்வாமியை மற்றவர்கள் அநுஸந்திப்பதற்கு இந்த பிருதானது இந்த ஸ்வாமியின் உபகாராதிசயத்தைக் காட்டும் ஒருவித ஜ்ஞாபகசிஹ்நமாக ஆயிற்று என்பதில் நாம் ஸந்தோஷிக்கிறோம். இந்த பிருதால் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்துக்கே ஒரு பெருமை ஏற்பட்டது.

வெகு காலமாக திருப்புட்குழி ஸ்வாமிக்குப் பிறகு இந்தப் பட்டத்தை ஸ்ரீ கபிஸ்தலம் ஸ்வாமியைவிட வேறு யாரும் அடையவில்லை. ஒரே சூன்யமாக இருந்தது. உன்னத ஸ்திதியிலிருந்த நம்முடைய ஸ்ரீ வைஷ்ணவ ப்ரபுக்களும் நம்முடைய ஸமூஹமும் இவ்விதம் நாதியற்றுப்போயிருக்கிறதே என்று சற்றேனும் யோசியாமல் உண்டியே உடையே என்பதுபோல் அவரவர் காலங்களை நிரர்த்தகமாகக் கழித்துவிட்டார்கள். இப்போது குணக்ராஹிகளான மஹான்கள் உதயமானார்கள். தகுந்த பாத்ரத்தில் பிருது ஸம்யோஜிக்கப்பட்டது. இவ்விதம் தகுந்த பாத்ரத்தில் மரியாதை செய்ததற்கு நாம்கவர்னமெண்டாருக்குமிகவும்க்ருதஜ்ஞதை உள்ளவர்களாக இருக்கிறோம்.

கீர்வாணபாஷாப்யுதயம்.

தத்காலம் கீர்வாணபாஷையின் மஹிமை தெரியாமல் அநாதரிக்கப்பட்டு வரும் ஸமயத்தில் இந்த பாஷையில் அநேகர் உத்ஸாஹத்துடன் வாசித்து அபிவ்ருத்தி ஆவதற்கு ஒரு பெரிய கலாசாலையையும், ஒருபுஸ்தகசாலையையும் ஏற்படுத்த வேண்டியதற்காக கூர்ஜா என்னும் தேசத்திலுள்ள ஸ்ரீமான் கௌரீசங்கர் கோயன்கா என்னும் ஸேட் ஐந்து லக்ஷத்து ஐம்பதுனாயிரம் ரூபாய்களை மூலதனமாக வைத்திருக்கிற விஷயம் நமக்கு பரமானந்தத்தைக் கொடுக்கிறது. இந்த மூலதனத்தை மூன்று விதமாக உபயோகப்படுத்த வேண்டுமென்று அந்த ஸேட்டின் கோரிக்கை. இதில் ஒரு லக்ஷ ரூபாயை வட்டிக்கிக்குப்போட்டு வ்ருத்யம்சத்திலிருந்து அபூர்வமான ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களை ஸம்பாதித்து, அவைகளை ஹிந்தி பாஷையில் மொழிபெயர்த்து அந்த தர்ஜத்துடன் ப்ரசுரம் செய்யவேண்டுமென்றும், இன்னொரு பாகத்தின் வ்ருத்யம்சத்திலிருந்து இந்த பாரத வருஷத்திலுள்ள ஸகல ஸம்ஸ்க்ருத வித்வான்களுக்கு வருஷத்துக்கு ஒரு முறை ஸம்பாவனைகள் கொடுக்க வேண்டுமென்றும், மீதத்தை ஒரு பெரிய வாசிக வித்யாலயம் ஏற்படுத்த வேண்டுமென்றும் எண்ணம். ஸமீபத்தில் இவரால் “ஸ்ரீஜோகிராம் மாத்ருமல் கோயங்கா ஸம்ஸ்க்ருத மஹா வித்யாலயம்’’ என்னும் பெயருடன் ஒருகலாசாலை ஏற்படுத்தப்பட்டது. இந்த தர்மத்தை ஸரியாக பரிபாலித்து நடத்துவதற்காக வாராணஸியிலுள்ள வித்வான்களான பஞ்சாநந்தர் கரத்ன, த்ராவிடம் லக்ஷ்மண சாஸ்திரிகள், வித்யாதர வேதாந்தாசார்யர் ஆகிய இம்மூவர்களும் முன்வந்து நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள். ஸம்ஸ்க்ருத பாஷையின் மஹிமை தெரியாமல் பாழாய்ப்போய் வரும் இந்த நாளில் இவ்வளவு உபகாரம் செய்யவேண்டுமென்று இந்த மஹான் ஸேட்ஜிக்குத் தோன்றினது அவருடையவும் நம்முடைய தேசத்தின் ஜன்மாந்தர பாக்யமே. இந்த நல்லஸமாசாரத்தை வித்வான்கள் எல்லாரும் கேட்டு மிகவும் ஸந்தோஷமடைவார்கள் என்று நினைக்கிறோம்.

ஸம்ஸ்க்ருத பாஷைக்கு ஜன்மபூமியான ஆர்யாவர்த்தம் ஏராளமான தனிகர்களால் நிறைந்த தேசமாதலால் இவ்வித தர்மங்கள் அவ்விடம் செய்வது ஆச்சர்யமன்று. எந்தக்கார்யத்தை ஸாதிக்கவேண்டுமென்றாலும் பணத்தை லக்ஷ்யமில்லாமல் கொடுக்ககூடிய மஹாப்ரபுக்கள் இருக்கிற இடம். வட இந்தியாவானது மஹம்மதீயர்களுடைய ஆக்ரமணம் ஆனபிறகு நம்முடைய தென் இந்தியாவில் கர்மானுஷ்டான பரர்களான அநேக வித்வான்கள் உண்டாகி அது ஒரு பெரிய வித்யாஸ்தானமாக இருந்தது. திரிமதஸ்தப்ரவர்த்தகர்களும் இவ்விடமே உண்டானார்கள். ஸுதராம் நம்முடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் பிறந்து வளர்ந்தது, இந்த தக்ஷிண தேசத்திலேயே. இந்த தேசத்தின் முன்காலத்து வைபவத்தையும் தத்காலம் அடைந்திருக்கும் க்ஷீணதசையையும் பார்த்தால் ஏன் இவ்விதம் ஆனது என்று ஒருவன் ஆச்சர்யப்படத்தக்கதாக இருக்கும்.

இந்த தக்ஷிண தேசத்தில் ராஜ ஸ்தானங்களில் ஸம்பாவனை வாங்க வேண்டியதற்காகவும் இன்னும் படிப்பை அடைவதையே ப்ரயோஜனமாய் அநேக வித்வான்கள் நல்ல யோக்யதையை உடையவரானார்கள். ஆங்கில பாஷையில் ப்ரவேசம் ஏற்பட ஏற்பட நம்முடைய சாஸ்த்ராப்யாஸங்களையே விட்டுவிட்டார்கள். ஸம்ஸ்க்ருத பாஷையைப் படிப்பதே துர்லபமாய்விட்டது. ஸூத்ராம் சாரீரக சாஸ்திரத்தைப் படிக்க எவனுக்கு புத்தி தோன்றும். முன்காலத்தில் திருப்பக்குழி அப்பாவென்று ப்ரஸித்தி பெற்ற மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உப. வே. க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி, ஸ்ரீ. உப. வே. கரூர் ராமாச்சார்யர் போல பண்டித ரத்னங்கள் இந்த பூபாகத்தை அலங்கரித்தார்கள். தத்காலம் பழையகாலத்தில் ஏற்பட்ட இரண்டொரு ஸ்வாமிகள் எழுந்தருளி இருக்கிறார்களே தவிர கீழ்வரிசையில் விசிஷ்டாத்வைத சாஸ்த்ரங்களை அப்பஸித்துநல்லயோக்யதையை அடைந்தேருகிறவர்கள் மிகவும் சிலரே. இப்பொழுது எழுந்தருளியிருக்கும் வித்வான்களுடைய காலத்துக்குப்பிறகு இவர்களுடைய ஸ்தானத்தை வஹிக்கக்கூடிய ஸாமர்த்தியத்துடன் எவர் எழப் போகிறாரோ. இவ்வித துர்தசைக்கு நம்முடைய ஸமூஹம் வந்திருந்தும், இவ்விதம் வந்துவிட்டதே என்று யோஜிக்கும் மனுஷ்யர்களைக்கூட கண்டு பிடிப்பது துர்லபமாக இருக்கிறது. தக்க மனுஷ்யர்களிருந்தாலல்லவோ அந்த துர்தசையைத் தீர்க்க பரிஹாரம் தேட முயற்சி செய்யலாம். இந்த துர்தசையுடன் நம்முடைய பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீ ஸூக்திகள் வர வர அதர்சனமாய்க் கொண்டுவருகின்றன. இவ்விதம் ஆகாமல் புஸ்தகங்களாகச் செய்து வைத்தாலல்லவோ பின்காலத்தில் யாருக்காவது உபயோகமாக இருக்கும்.

இவ்விதம் நம்முடைய தேசத்தினுடைய இரண்டு குறைகளையும் தீர்த்தால் ஒழிய நம்முடைய தேசம் முன்னுக்கு வருவது அஸாத்யமான கார்யம். நம்முடைய தேசத்தில் பணமில்லாமலில்லை. பணங்களும் எவ்வளவோ விதத்தில் செலவழிந்துகொண்டிருக்கின்றன. மதம் இவ்விதம் ஹீன ஸ்திதியிலிருக்கும்போது அதை சீர்திருத்த வேண்டியது ஒவ்வொருபரபுக்களுடைய முதன்மையான கடமையாகும். இதை கவனியாமல் மற்ற விஷயங்களில் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தால் தேசம் க்ஷேமத்துக்கு வராது என்பது நிச்சயம். பாக்யவான்கள் இவைகளை கவனித்து தங்களால் இயன்றமட்டும் ஸஹாயம் செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டால் மிகவும் தேசத்துக்கு உபகாரம் செய்ததாகும்.

—

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய நம: ॥

ஸ்ரீமத்பகவத் பாஷ்யகாரேண ஸங்க்ருஹீத:

॥ ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹ: ॥

ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த

ஸ்ரீவேதார்த்த ஸங்க்ரஹம்.

அசேஷசிதசித்வஸ்து சேஷிணே சேஷஶாயினே ।
நிர்மலானந்தகல்யாண நிதயே விஷ்ணவே நம: ॥

॥ ஸ்ரீ: ॥

॥ தராபூநீளா ஹேமாப்ஜநாயிகா ஸமேத
ஸ்ரீதேவநாத பரப்ரஹ்மணே நம: ॥
॥ ஸ்ரீமதே வகுளபூஷண மஹாகுரவே நம: ॥
॥ ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய நம: ॥
॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥
॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேஶிகாய நம: ॥

ஸ்ரீ. உப. வே. திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம்
பண்டிதபூஷணம் மஹா மஹோபாத்யாய
நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்
தமிழ் மொழிபெயர்ப்பு.

R 65 ... M76.16

சேதனம் அசேதனம் என்கிற எல்லா வஸ்துக்களுக்கும் சேஷியாயும், ஆதிசேஷன் மேல் படுத்துக் கொண்டிருப்பவனுயும், தோஷங்கள் இல்லாத எண்ணிறந்த கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாயும் இருக்கிற விஷ்ணுவை நமஸ்கரிக்கிறேன். *

*இந்த ஶ்லோகத்தினால் இவர் தம்மால் மேலே ஸ்தாபிக்கப்படப்போகிற விசிஷ்டாத்வைத மதத்தின் தத்வங்கள் ஸங்க்ரஹ...

186262 ... சென்னை-600 ...

𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌾𑌜𑍍𑌞𑌂 𑌭𑍍𑌰𑌮𑌪𑌰𑌿𑌗𑌤𑌂 𑌸𑌂𑌸𑌰𑌤𑌿
𑌤𑌤𑍍𑌪𑌰𑍋𑌪𑌾𑌧𑍍𑌯𑌾𑌲𑍀𑌢𑌂 𑌵𑌿𑌵𑌶𑌮𑌶𑍁𑌭𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌪𑌦𑌮𑌿𑌤𑌿 ।
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌪𑍇𑌤𑌂 𑌜𑌗𑌤𑌿 𑌵𑌿𑌤𑌤𑌂 𑌮𑍋𑌹𑌨𑌮𑌿𑌦𑌂 𑌤𑌮𑍋
𑌯𑍇𑌨𑌾𑌪𑌾𑌸𑍍𑌤𑌂 𑌸 𑌹𑌿 𑌵𑌿𑌜𑌯𑌤𑍇 𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑍁𑌨𑌿𑌃 ॥

---

* பரப்ரும்மமே அவித்யையை உடையதாய்க்கொண்டு ப்ரமங்களினுல் சூழப்பட்டதாய் ஸம்ஸாரத்தை அடைந்திருக்கிறது என்றும், அந்த ப்ரும்மமே தன்னைவிட வேருன உபாதிகளுடன் சேர்ந்ததாய் கர்மங்களுக்கு பரவஸமாகிறது என்றும், அஸுபங்களுக்குத் தானே ஆதாரமாகிறது என்றும், ஸ்ருதிகள் ந்யாயங்கள் இவைகளுக்கு விருத்தமாய் லோகத்தில் பரவி இருக்கிற எல்லா ஜனங்களையும் மயக்கக்கூடியதான அஜ்ஞானம் எந்த ஆசார்யனுல் போக்கடிக்கப்பட்டதோ அப்படிப்பட்ட ஸ்ரீ ஆளவந்தார் மேன்மைபெற்று விளங்குகிருர்.

றன—எல்லா வஸ்துக்களும் உண்மையென்றும், இவைகளுக்கு எல்லாம் ஸ்வாமியானவன் விஷ்ணுவே என்றும், அவன் கெட்டகுணங்கள் ஒன்றும் இல்லாமல் எல்லாக் கல்யாண குணங்களையும் உடையவன் என்றும் அருளிச் செய்யப்பட்டிருக்கிறபடியினுல்.

*இதில் 'ஸம்ஸரதி' என்னும் வரையிலாக ஸாங்கரமதமும், 'விவஸம்' என்னுமளவாக பாஸ்கரமதமும், 'அஸுபஸ்யாஸ்பதம்' என்று யாதவப்ரகாஸமதமும் சொல்லப்பட்டதாகிறது. அதில் லோகங்களுக்கும் ப்ரும்மத்திற்கும் பேதமும் அபேதமும் ஸ்வபாவத்திலேயே ஏற்பட்டது என்று சொல்லுகிறபடியினுல் லோகத்திலுள்ள தோஷங்கள் எல்லாம் அத்துடன் அபின்னமான ப்ரும்மத்தை அடையும் என்று தாத்பர்யம். அந்தந்த இடங்களிலேயே இவரால் விஸ்தாரமாக நிரூபிக்கப்படப் போகிறபடி அந்தந்த மதங்களை நிராகரிக்கும் விதமும் இங்கு சுருக்கிச் சொல்லப்படுகிறது. இங்கு 'ஸாவ' என்பது விரோதத்தைக் காட்டுகிறது. எல்லாக் கல்யாண குணங்களுக்கும் இருப்பிடம் என்னப்படும் ப்ரும்மத்திற்கு அஜ்ஞானம் எப்படி ஸம்பவிக்கும் என்கிற விரோதமும், எப்பொழுதும் தனக்குத்தானே ப்ரகாஸித்துக் கொண்டிருக்கையையே ஸ்வபாவமாகவுடைய ப்ரும்மத்திற்குத் தன்னை அறியாமையாகிய அவித்யை எப்படி ஸம்பவிக்கும் என்கிற விரோதமும், ப்ரும்மமே ஸம்ஸாரத்தை அடையுமாகில் அதற்கல்லவோ மோக்ஷம் பெறவேண்டும் என்கிற ஆசையும், வேதாந்த ஸ்ரவணுதிகளும் செய்யவேண்டியவைகளாகும் என்கிற விரோதமும் தெரிவிக்கப்பட்டதாகிறது. இப்படியே மற்றப் பக்ஷங்களிலும் கர்மங்களுக்கு வசப்பட்டிருக்கையும் துக்கங்களுக்கு வசப்பட்டிருக்கையும்

॥ 𑌸𑍍𑌵𑌪𑌕𑍍𑌷 (𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌦𑍍𑌵𑍈𑌤𑌮𑌤) 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌃 ॥

𑌅𑌶𑍇𑌷𑌜𑌗𑌦𑍍𑌧𑌿𑌤𑌾𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌨𑌿𑌕𑌰𑌶𑌿𑌰𑌸𑌿 𑌸𑌮𑌧𑌿𑌗𑌤𑍋𑌽𑌯𑌮𑌰𑍍𑌥𑌃 — 𑌜𑍀𑌵𑌪𑌰𑌾𑌤𑍍𑌮𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌧𑌰𑍍𑌮𑍇𑌤𑌿𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌾𑌕𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌚𑌰𑌣𑌯𑍁𑌗𑌲𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌰𑍍𑌚𑌨𑌪𑍍𑌰𑌣𑌾𑌮𑌾𑌦𑌿𑌰𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌫𑌲𑌃 । 𑌅𑌸𑍍𑌯 𑌜𑍀𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌨𑌾𑌦𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑌞𑍍𑌚𑌿𑌤𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑌰𑍂𑌪𑌕𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌹𑍇𑌤𑍁𑌕𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌸𑍁𑌰𑌨𑌰𑌤𑌿𑌰𑍍𑌯𑌕𑍍𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌤𑍍𑌮𑌕𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌦𑍇𑌹𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌕𑍃𑌤𑌤𑌤𑍍𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌜𑌨𑌿𑌤𑌾𑌵𑌰𑍍𑌜𑌨𑍀𑌯𑌭𑌵𑌭𑌯

[ஸ்வபக்ஷ (ஸ்ரீ விஸிஷ்டாத்வைதமத) ஸங்க்ஷேபம்.]

எல்லா லோகங்களுக்கும் நன்மையை விதிக்கிற வேதங்களினுடைய கூட்டங்களின் தலையாகிய உபநிஷத்துக்களில் அறியப்படுகிற அர்த்தமாவது—ஜீவாத்மா பரமாத்மா இவர்களின் உண்மையை அறிந்து அதை முன்னிட்டுச் செய்யப்படுகிற வர்ணுஸ்ரம தர்மங்களை அங்கமாகவுடையதாயும் மிகவும் ப்ரியமாகச் செய்யப்படுகிற பரமாத்மாவின் இரண்டு திருவடிகளைப் பற்றிய த்யானம் அர்ச்சனம் நமஸ்காரம் முதலியவை அந்தப் பரமாத்மாவின் ப்ராப்தியை ப்ரயோஜனமாக உடையது என்பது. (ஏனெனில்) இந்த ஜீவாத்மாவிற்கு அநாதியான அஜ்ஞானத்தினுல் உண்டாக்கப்பட்ட புண்ய பாபங்களாகிற கர்மங்களின் பரம்பரையைக் காரணமாக உடைய ப்ரும்மா முதலிய தேவர்கள், மனிதர்கள், பசுக்கள், ஸ்தாவரங்கள் ஆகிய நான்கு விதங்களான தேஹங்களில் ப்ரவேஸிப்பதினுல் உண்டாக்கப்பட்ட அந்தந்த தேஹங்களே ஆத்மா என்கிற அபிமானத்தினுல் உண்டாக்கப்பட்ட பரிஹரிக்க முடியாததான ஸம்ஸாரத்தில் உண்டாகிய பயத்தைப் போக்கடிப்பதற்காக தேஹத்தைவிட வேறு

அந்த ப்ரும்மத்திற்குப் பொருந்தாது என்கிற விரோதமும் சுருக்கமாகச் சொல்லப்பட்டதாகிறது. இப்படி இந்த மதங்கள் தாங்களே ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறபடியினுலே அவற்றைத் தாம் நிராகரிக்கவேண்டியது அவஸ்யமல்லவே என்பதைப் பரிஹரிப்பதற்காக 'லோகத்தில் பரவி இருக்கிற' இத்யாதி அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ஆக இந்த இரண்டு ஸ்லோகங்களினுலும் பகவானைப்பற்றியும் ஆசார்யனைப்பற்றியும் மங்களம் அருளிச்செய்யப்பட்டதாகிறது. இடையில் இந்த க்ரந்தத்தில் தாம் அருளிச்செய்யப் போகிற க்ரமத்தை அனுஸரித்து தம்முடைய ஸித்தாந்தத்தை ஸ்தாபிப்பதும், விரோதமான ஸித்தாந்தங்களை நிராகரிப்பதும் செய்யப்படுகின்றன.

𑌵𑌿𑌧𑍍𑌵𑌂𑌸𑌨𑌾𑌯 𑌦𑍇𑌹𑌾𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪 𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑌭𑌾𑌵 𑌤𑌦𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪 𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑌭𑌾𑌵 𑌤𑌦𑍁𑌪𑌾𑌸𑌨 𑌤𑌤𑍍𑌫𑌲𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌾𑌨𑌨𑍍𑌦 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑍁𑌭𑌵𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌹𑌿 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌾𑌕𑍍𑌯𑌜𑌾𑌤𑌂 1 '𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿', 2 '𑌅𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮', 3 '𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌵𑍇𑌦 𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿 𑌸 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃', 4 '𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌽𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌦𑌿𑌵𑍍𑌯𑍋 𑌦𑍇𑌵 𑌏𑌕𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃', 5 '𑌤𑌮𑍇𑌤𑌂 𑌵𑍇𑌦𑌾𑌨𑍁𑌵𑌚𑌨𑍇𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌵𑌿𑌦𑌿𑌷𑌨𑍍𑌤𑌿 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌤𑌪𑌸𑌾𑌽𑌨𑌾𑌶𑌕𑍇𑌨', 6 '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌪𑌰𑌂', 7 '𑌤𑌮𑍇𑌵𑌂

பட்டதான ஜீவாத்மாவின் ஸ்வரூபம், அதின் ஸ்வபாவம், அந்த ஜீவாத்மாக்களுக்கும் அந்தர்யாமியாகிய பரமாத்மாவின் ஸ்வரூபம், அவருடைய ஸ்வபாவம், அவரைப்பற்றிய உபாஸனம், அந்த உபாஸனத்திற்கு ப்ரயோஜன(பல)மாகிய ஜீவாத்மாவின் உண்மையான ஸ்வரூபம் ப்ரகாசிப்பதை முன்னிட்டு உண்டாகிற எல்லையில்லாத மேன்மையை உடைய ஆனந்தமாகிய அந்தப் பரமாத்மாவின் அநுபவம், இவைகளைத் தெரிவிப்பதற்காகவல்லவோ 'நீ அந்த ப்ரும்மம் ஆகிறாய்,' 'இந்த ஜீவாத்மா ப்ரும்மம் தான்,' 'எவன் ஜீவாத்மாவின் இடத்தில் இருந்துகொண்டு அந்த ஆத்மாவிற்கு உள்ளே இருக்கிறானோ, எவனை ஜீவாத்மா அறியவில்லையோ, எவனுக்கு இந்த ஜீவாத்மா ஶரீரமோ, எவன் இந்த ஜீவாத்மாவை உள்ளே இருந்துகொண்டு நியமிக்கிறானோ அப்படிப்பட்ட ஒருவித விகாரமில்லாத எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியானவன் உனக்கும் ஆத்மா,' 'இவன் எல்லா ப்ராணிகளுக்கும அந்தராத்மாவாயும் கர்மஸம்பந்தங்கள் இல்லாதவனுயும், இந்த வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணனுயும் (அதாவது இவைகளில் உண்டாகும் தோஷங்கள் ஒன்றோடும் ஸம்பந்தம் இல்லாதவனுயும்) இருக்கிற நாராயணன் என்கிற ஒரு தேவன்,' 'அப்படிப்பட்ட இந்தப் பரமாத்மாவை ப்ரும்மத்தை அறிந்தவர்கள் வேதங்களை ப்ரவசனம் செய்வதினாலும், யஜ்ஞம் தானம் தபஸ்ஸு உபவாஸம் இவைகளினாலும், அன்றிக்கே பலங்களில் ஆசையில்லாமல் செய்யப்படுகிற யஜ்ஞம் தானம் தபஸ்ஸு இவைகளினாலும் அறியவேண்டும் என்று இச்சிக்கிறார்கள்,'

1. சாந்தோக்யம்-6-8-7. 2. ப்ருஹதாரண்யகம்-6-4-5.
3. ப்ருஹதா-5-7-22 4. ஸுபாலோபநிஷத்-7. 5. ப்ருஹதாரண்யகம்-6 4-22.
6. தைத்திரீயம்-ஆநந்தவல்லி. 7. புருஷஸூக்தம்-17.

𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌮𑍃𑌤 𑌇𑌹 𑌭𑌵𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌅𑌯𑌨𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌂 ‖

𑌜𑍀𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌦𑍇𑌵𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌵𑌿𑌶𑍇𑌷𑌰𑍂𑌪𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌭𑍇𑌦𑌰𑌹𑌿𑌤𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑍈𑌕𑌗𑍁𑌣𑌂 𑌤𑌸𑍍𑌯𑍈𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌭𑍇𑌦𑍇 𑌵𑌿𑌧𑍍𑌵𑌸𑍍𑌤𑍇 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌭𑍇𑌦𑍋 𑌵𑌾𑌚𑌾𑌮𑌗𑍋𑌚𑌰𑌃, 𑌸𑍍𑌵𑌸𑌂𑌵𑍇𑌦𑍍𑌯𑌃, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌂 । 𑌤𑌚𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂 𑌸𑌮𑌾𑌨𑌂 ।

'ப்ரும்மத்தை அறிந்தவன் பரமாத்மாவை அடைகிறான்,' 'அவனை இப்படி அறிந்தவன் இந்த ஜன்மத்திலேயே மோக்ஷத்தை அடைந்தவனாகிறான், மோக்ஷத்திற்கு வேறு வழி இல்லை' என்றிவை முதலிய வேதாந்த வாக்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

(இந்த வாக்யங்களில்)* ஜீவாத்மாவின் ஸ்வரூபம் தேவன்மனுஷ்யன் முதலிய ப்ரக்ருதியின் பரிணாம விசேஷங்களாகிய அனேக வித பேதங்கள் இல்லாதது, ஜ்ஞானம் ஆனந்தம் இவைகளையே குணமாக உடையது, அப்படிப்பட்ட இந்த ஜீவாத்மாவிற்குக் கர்மங்களினால் உண்டாக்கப்பட்ட தேவன் முதலிய பேதங்கள் போக்கடிக்கப்பட்டதேயானால் ஸ்வபாவத்தில் பேதம் வாயால் சொல்லமுடியாது, அவனவனுக்குத் தானே ப்ரகாசிக்கிறதாயிருக்கிறது, ஜ்ஞானஸ்வரூபம் என்றே சொல்லக்கூடியது. இது எல்லா ஜீவாத்மாக்களுக்கும் பொதுவானது. இப்படிப்பட்ட சேதனாசேதனங்களாகிய ப்ரபஞ்சங்

* இவ்வாக்யங்களில் த்யானம் முதலியவைகள் பரமாத்மப்ராப்திக்கு உபாயம் என்றது யுக்தமாகுமோ? பரமாத்மாவைத் தவிர மற்ற எல்லா வஸ்துக்களும் பொய்யாகையினால் அவற்றை அப்படி அறிந்தமாத்திரத்தினால் அவை நிவ்ருத்தியடையாதோ? கயிற்றைக்கண்டு பாம்பு என்று ப்ரமித்தவனுக்கு இது பாம்பு அல்ல, இது கயிறு என்கிற ஜ்ஞானமுண்டானதும் முன்ப்ரமம் நிவ்ருத்தியடைகிறது, அப்படி அதற்காக த்யானம் செய்யவேண்டியதில்லையே, அதைப்போலே இவ்விடத்திலும் த்யானம் முதலியவைகள் வேண்டியதில்லை என்கிற ஶங்கையைப் பரிஹரிப்பதற்காக மேல் வாக்யம் ஆரம்பிக்கப்படுகிறது. அதாவது வேதாந்தவாக்யங்களில் ஸம்ஸாரம் முதலியவைகள் உண்மை என்றே சொல்லப்படுகிற படியினால் அதின் நிவ்ருத்தி கேவலம் ஜ்ஞானம் மாத்திரத்தினால் உண்டாகாது, பக்தியினாலே உண்டாகவேண்டும் என்று அந்த வாக்யத்தின் திரண்டபொருள்.

ஸர்வம் விஹாய சிதசிதாத்மகப்ரபஞ்சஸ்ய உத்பவஸ்திதிப்ரளயஸம்ஸாரநிவர்த்தநைகஹேதோ: ஸமஸ்தஹேயப்ரத்யநீகதயாऽநந்தகல்யாணைகதாநதயா ச ஸ்வேதரஸமஸ்தவஸ்துவிலக்ஷணஸ்வரூபோऽநவதிகாதிசயாஸங்க்யேயகல்யாணகுணகண: ஸர்வாத்ம பரப்ரஹ்ம பரஞ்ஜ்யோதி: பரதத்த்வ பரமாத்ம ஸதாதி சப்தபேதை: நிகிலவேதாந்தவேத்யோ பகவாந்நாராயண: புருஷோத்தம இத்யந்தர்யாமிஸ்வரூபம் | அஸ்யைவ ச வைபவப்ரதிபாதநபரா: ச்ருதய: ஸ்வேதரஸமஸ்தசிதசித்வஸ்துஜாதாந்தராத்மதயா நிகிலநியமநம் தச்சக்த்யம்சதத்விபூதி தத்ரூபதச்சரீரதத்தநுப்ரப்ருதிபி: சப்தை: தத்ஸாமாநாதிகரண்யேந ச ப்ரதிபாதயந்தி ||.

களினுடைய உத்பத்திஸ்திதிப்ரளயம் ஸம்ஸாரத்தைப் போக்கடிப்பது இவைகளுக்கு முக்ய காரணமானவனும் கெட்ட குணங்களுக்கு விரோதமாயிருப்பதினுலும் எண்ணிறந்த கல்யாண குணங்களுக்கே இருப்பிடமாக இருப்பதினுலும் தன்னைவிட மற்ற எல்லா வஸ்துக்களைக்காட்டிலும் வேறுபட்ட ஸ்வரூபத்தை உடையவனும், எல்லையில்லாத மேன்மையை உடைய கணக்கில்லாத கல்யாணகுணங்களை யுடையவனும் ஸர்வாத்ம, பரப்ரும்ம, பரஞ்ஜ்யோதி, பரதத்வ, பரமாத்ம, ஸத், முதலிய வெவ்வேறுபட்ட பதங்களினுல் எல்லா உபநிஷத்துக்களிலும் அறியப்படுகிறவன் பகவானும் புருஷோத்தமனும் இருக்கிற நாராயணன் என்று அந்தர்யாமியின் ஸ்வரூபமும் (அறியப்பட்டது). இந்தப் பரமாத்மாவின் * மஹிமையைச் சொல்லுகிற ஶ்ருதிகள் தன்னைத்தவிர மற்ற எல்லாச் சேதனசேதன வஸ்துக்களுக்கு அந்தராத்மாவாக இருந்து எல்லா வஸ்துக்களையும் நியமிக்கிறன் என்பதை இந்த லோகங்கள் எல்லாம் அவனுடைய ஶக்தி, அவனுடைய அம்ஶம், அவனுடைய விபூதி, அவனுடைய ரூபம், அவனுடைய ஶரீரம், அவனுடைய தனு (தேஹம்) என்றிவை முதலிய பதங்களினுலும் அவனே இந்த லோகம் என்று ஒன்று சேர்த்துச்சொல்லி யிருப்பதினுலும் நிரூபித்திருக்கின்றன.

*பேதஶ்ருதிகளும் கடகஶ்ருதிகளும் அனேகங்களாயும் வேறுவிதமாக அர்த்தம் சொல்ல முடியாதவைகளாயும் இருக்கிறபடியினுலும் அவைகளுக்கு அனுகுணமாகவே அபேதஶ்ருதிகளுக்கு அர்த்தம் சொல்ல வேண்டும். அபேதஶ்ருதிகளை அங்கீகரித்து மற்ற ஶ்ருதிகளைப் பொய் என்று சொல்லுவதைக்காட்டிலும் அவைகளை அனுஸரித்து அபேதஶ்ருதிகளும் பரமாத்மாவின் மஹிமையைச் சொல்லுகின்றன என்று சொல்லில் எல்லா ஶ்ருதிகளுக்கும் ஒரே தாத்பர்யம் ஸம்பவிக்கிறது, சில ஶ்ருதிகள் பொய் என்று சொல்ல வேண்டி வருகிறதில்லை, என்கிற யுக்தியைக் கருத்தில்கொண்டு 'இந்தப்பரமாத்மாவின்' இத்யாதி அருளிச்செய்திருக்கிறர் என்றறியத்தக்கது.

॥ சாங்கரபக்ஷ ஸங்க்ஷேப: ॥

தஸ்ய வைபவப்ரதிபாதநபராணாமசேஷாணாம் ஸாமாநாதிகரண்யாதீநாம் விவரணே ப்ரவ்ருத்தா: கேசந நிர்விசேஷஜ்ஞாநமாத்ரமேவ ப்ரஹ்ம, தச்ச நித்யமுக்தஸ்வப்ரகாசஸ்வபாவமபி தத்த்வமஸ்யாதிஸாமாநாதிகரண்யாவகதஜீவைக்யம், ப்ரஹ்மைவாஜ்ஞம் பத்யதே முச்யதே ச, நிர்விசேஷசிந்மாத்ராதிரேகி ஈசிதவ்யாத்யநந்தவிகல்பரூபம் க்ருத்ஸ்நம் ஜகந்மித்யா, கச்சித் முக்த: கச்சித் பத்த: இதீயம் வ்யவஸ்தா ந வித்யதே, இத: பூர்வம் கேசந முக்தா இத்யயமர்த்தோ மித்யா, ஏகமேவ சரீரம் ஜீவவத், நிர்ஜீவாநீதராணி சரீராணி, தச்சரீரம்

[ஶாங்கரபக்ஷ ஸங்க்ஷேபம்.]

இப்படிப்பட்ட பரமாத்மாவின் மஹிமையை நிரூபிக்கவந்த இந்த ஒன்று சேர்த்துச் சொல்லியிருப்பது முதலியவைகளுக்கு வ்யாக்யானம் செய்வதில் ஆரம்பித்திருக்கிற சிலர் ஒரு விஶேஷமுமில்லாத ஜ்ஞானம் மாத்திரமே ப்ரும்மம், அது எப்பொழுதும் ஸம்ஸார ஸம்பந்தமற்றதாயும் ஸ்வயம் ப்ரகாஶமாயும் இருப்பதையே ஸ்வபாவமாக உடையதாயிருந்தபோதிலும் 'நீ அந்த ப்ரும்மமாகிருய்' என்றிவை முதலிய ஒன்று சேர்த்துச் சொல்லியிருக்கிற வாக்யங்களினுல் அறியப்பட்ட ஜீவாத்மாவுடன் ஒன்றுயிருக்கும் தன்மையை உடையது, அப்படிப்பட்ட ப்ரும்மமே அவித்யையை உடையதாய்க்கொண்டு ஸம்ஸாரபந்தத்தை அடைகிறது, மோக்ஷத்தையும் அடைகிறது, ஒருவிஶேஷமும் இல்லாத ஜ்ஞானத்தைத் தவிர வேறு ஈஶ்வரன் அவனுல் நியமிக்கப் படக்கூடிய வஸ்துக்கள் முதலிய அளவிறந்த பேதங்களையே ஸ்வரூபமாக உடைய லோகம் முழுவதும் பொய், ஒருவன் ஸம்ஸாரத்தில் கட்டுப்பட்டவனுயிருக்கிறன் ஒருவன் மோக்ஷத்தை அடைந்தான் என்கிற இந்த ஏற்பாடும் இல்லை, இதற்குமுன் சிலர் மோக்ஷத்தை அடைந்தார்கள் என்கிற இந்த அர்த்தமும் பொய், ஒரு ஶரீரமே ஜீவாத்மாவை உடையது, மற்ற ஶரீரங்கள் ஜீவாத்மா இல்லாதது, அந்த ஜீவாத்மாவைஉடைய ஶரீரம் எது என்று

கிஞ்சித் ந வ்யவஸ்திதம், ஆசார்யோ ஜ்ஞாநோபதேஷ்டா மித்யா, ஶாஸ்த்ரம் ச மித்யா, ஶாஸ்த்ரஜ்ஞாதா ச மித்யா, ஶாஸ்த்ரஜந்யம் ஜ்ஞாநம் ச மித்யா, ஏதத் ஸர்வம் மித்யாபூதேநைவ ஶாஸ்த்ரேணாவகம்யத இதி வதந்தி ||

|| பாஸ்கரபக்ஷ ஸங்க்ஷேப: ||

அபரே து அபஹதபாப்மத்வாதிஸமஸ்தகல்யாணகுணோபேதமபி ப்ரஹ்மைவைக்யாவபோதேந கேநசிதுபாதிவிஶேஷேண ஸம்பத்தம் பத்யதே முச்யதே ச, நாநாவிதமலரூபபரிணாமாஸ்பதம் சேதி வ்யவஸ்திதா: ||

|| யாதவபக்ஷ ஸங்க்ஷேப: ||

அந்யே புந: ஐக்யாவபோதயாதாத்ம்யம் வர்ணயந்த: ஸ்வாபாவிகநிரதிஶயாபரிமிதோதாரகுணஸாகரம்

ஏற்படவில்லை, ஜ்ஞானத்தை உபதேஶம் செய்கிற ஆசார்யனும் பொய், ஶாஸ்திரமும் பொய், ஶாஸ்திரத்தை அறிகிறவனும் பொய், ஶாஸ்திரத்தினால் உண்டாக்கப்பட்ட ஜ்ஞானமும் பொய், இவையெல்லாம் பொய்யான ஶாஸ்திரத்தினாலேயே அறியப்படுகிறது என்று சொல்லுகிறார்கள்.

[பாஸ்கரபக்ஷ ஸங்க்ஷேபம்.]

இன்னும் சிலர் கர்மஸம்பந்தங்கள் அற்றிருக்கை முதலிய எல்லாக் கல்யாண குணங்களை உடையதாயிருந்தபோதிலும் ப்ரும்மம் இந்த ஶ்ருதிகளில் இருக்கிற ஐக்யோபதேஶத்தினாலேயே சில உபாதிகளுடன் சேர்ந்ததாய் ஸம்ஸார பந்தத்தை அடைகிறது மோக்ஷத்தையும் அடைகிறது, அநேக விதங்களான தோஷங்களாகிய விகாரங்களுக்கும் ஆதாரமாகிறது என்று நிஶ்சயித்திருக்கிறார்கள்.

[யாதவபக்ஷ ஸங்க்ஷேபம்.]

ஒன்றென்று சொல்லியிருப்பதின் உண்மையை நிரூபிக்கிற *இன்னும் சிலர் ஸ்வபாவத்திலேயே ஏற்பட்ட தனக்கு மேலானது ஒன்றும் இல்லாத கணக்கில்லாத கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாகிய அந்த ப்ரும்மமே

---

*இம்பாஸ்கர மதத்தில் அபேதம் ஸ்வபாவத்தில் ஏற்பட்டது பேதம் காரணத்தினால் ஏற்பட்டது என்பதும், இந்த யாதவ மதத்தில் பேதம் போல அபேதமும், அபேதம் போலப் பேதமும் ஸ்வபாவத்தில் ஏற்பட்டது என்பதும்

ரணமாகையினால் அதைவிட்டுப் பிரியாமல் ப்ரீதி பூர்வகமாக ஸம்ஶ்லேஷித்திருக்கிறாள் என்றபடி, தோளாத - துளைக்கப்படாத, ஒருவிதத் தோஷமும் இல்லாத என்றபடி, மாமணி - பெரிய நீலரத்னத்திற்கு, நீலரத்னம் போன்ற எம்பெருமானுக்கு என்றபடி, தொண்டு - தாஸ்யத்தை (கைங்கர்யத்தை), பூண்டு - தனக்கு அலங்காரமாக அங்கீகரித்து, அவனுடன் விட்டுப் பிரியாமை பெரிய பிராட்டிக்கு அலங்காரம், அவ்விருவருமான சேர்த்தியில் கைங்கர்யம் பண்ணுவது இவனுக்கு அலங்காரம், இத்தால் 'திருவுக்கும் திருவாகிய செல்வா' என்கிறபடியே எல்லா வஸ்துக்களுக்கும் ஸம்பத்தைக் கொடுக்கக்கூடியவளான அவளுக்கும் இவன் ஸம்பத்தைக் கொடுக்கிறவன், அவளுடைய சேர்த்தியால் இவனும் நிரவதி கைஶ்வர்யம் பெற்றான் என்றபடி, இப்படிப்பட்ட மிதுனச் சேர்த்தியில் அடிமை செய்வதினால் இவன் நிரவதிக கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப் பெற்றான், 'ஸஹ ஜகத்ஸ்ராநாயா த்ராமேய ஶ்ரீவ்யோமஶ்ரத:' என்கிறபடியே ஸ்வரூபோசிதமான கைங்கர்யமாகிற புருஷார்த்தத்திற்கு உறுப்பாகையாலே மா உரியும் அலங்காரமாயிற்று என்றபடி, தொழுது - ஸேவித்து, உகந்து - அந்த அநுபவத்தினால் உண்டான ப்ரீதியை அடைந்து அந்த ப்ரீதிக்குப் பரிவாஹமாக, தோத்திரங்கள் பாடி - ஸ்தோத்திரங்களைப் பாடி, இம் நிரூபித்தருளினபடியே திருப்பல்லாண்டு முதலியவைகளைப் பாடி, அவ்வளவிலும் த்ருப்தி பெறுமல், ஆடி-நர்த்தனம்செய்து, 'மொய்ம்மாம்பூம்பொழில்' என்கிற திருவாய்மொழியில் அருளிச் செய்திருக்கிறபடியே ஸம்ப்ரம நர்த்தனங்களைச் செய்து, கேளாத - ஸம்ஸாரி தசையில் கேட்கப்படாத, பழை - அநாதியான, மறையின் - வேதத்தின், கீதம் கேட்டு - கானத்தை ஶ்ரவணம்பண்ணி, நித்யமுக்தர்கள் பண்ணும் ஸாமகானங்களைக்கேட்டு என்றபடி, கிடையாத - நமக்குக்கிடைக்கத் தகாததான, அன்றிக்கே இப்படி உபாயாநுஷ்டானம் பண்ணினவர்களுக்குத் தவிர மற்றவர்களுக்குக் கிடைக்கக்கூடாததான, பேரின்பம் - பெரிய ஆனந்தம், நாளும் - தினம்தோறும், பெருக - வ்ருத்தி அடைந்துகொண்டுவர, மீளாத - திரும்பிவராத, அநுபவிக்கும் ஆனந்தத்திற்குக் குறைவாவது, முடிவாவது இருந்தாலல்லவோ புனராவ்ருத்திக்கு ப்ரஸங்கம் உண்டு, 'அப்பொழுதைக் கப்பொழுது என்னாராவமுதமே' என்கிறபடியே அநுபவிக்க அநுபவிக்க ஆனந்தம் அதிகமாக வருகிறபடியினால் புனராவ்ருத்திக்கு ப்ரஸங்கம் இல்லை என்றபடி, பேரடிமைக்கு - மஹா கைங்கர்யத்திற்கு, அன்பு - ஸ்நேஹத்தை, அத்துடன் கூடிய த்வரையை அதாவது கைங்கர்யத்தை அடைவதில் த்வரையை என்றபடி, அன்றிக்கே அவ்வளவு கைங்கர்யத்திற்குக் காரணமான பகவத் க்ருபையை, பெற்றோம் - அடைந்தோம், இதில் ஸம்ஶயம் இல்லை

பலாதாகர்ஷத்பிர் பஹுபிரபராதைர் விஹிதயா
பராவ்ருத்த்யா நித்யம் பவஜலதிபங்கே நிபததாம் |
ப்ரதிம்நா ஸம்பூர்ணா பகவதநுகம்பைகவிஷயா
ப்ரதீசீ த்ருஷ்டேயம் பரமபதஸோபாநபதவீ ||

என்று கருத்து, இப்படிப்பட்ட பாக்யத்தைப் பெற்றிருந்தபோதிலும், மேதினியில் - இந்தப்பூமியில், விதியினால் - பகவத் ஸங்கல்ப விசேஷத்தினால், இருக்கின்றோம். இங்கு 'விதி' என்றருளிச்செய்தது 'காலம் கர்ம ச ஜகதீ விதிநா கேநசித் ஸ்தாப்யமாநா:' என்றிவர் தாமே அருளிச்செய்திருக்கிற படியே இன்னவிதமான ஸங்கல்பம் என்று நம்மால் அறியமுடியாதது, அதாவது அர்ச்சாவதார ரூபத்தில் இருக்கும் நம்முடைய ஸங்கவிசேஷத்தினாலோ, 'நித்யாபேக்ஷ: ஸ்வஹிதஜநநம் ப்ராஹ க்ருஷ்ணம் ஶரண்ய:' என்றும், 'ஸாபேக்ஷாபவிசோதநம்' என்றும் இவர் தாமே ஸ்ரீமத் த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்னாவளியிலும், ஸாரத்திலும் ஸங்க்ரஹித்தருளினதற்கு மூலமான 'பொலிக பொலிக' என்கிற திருவாய்மொழியில் படியே நம்மைக் கொண்டு மற்ற சேதனர்களையும் திருத்தவேண்டும் என்கிற பகவத் ஸங்கல்பத்தினாலோ என்று நிச்சயிக்க முடியாத ஒரு ஸங்கல்பத்தினால் என்றபடி, 'இங்கே திரிந்தேர்க்கு இழுக்குற்றென்,' 'ஏசார்முயல்விட்டுக் காக்கை பின் போவதே' இத்யாதிகளையும் இங்கனுஸந்திப்பது. 21

இந்த ஸ்ரீ பரமபத ஸோபானம் பகவத் க்ருபையைத் தனக்குப் பலமாக உடையதாகையினால் ஒருநாளும் ஶிதிலமாகாதது என்று அருளிச்செய்கிறார்—'பலாதாகர்ஷத்பி:' என்றாரம்பித்து.

[ப - ப்.] பலாத் - பலத்தினால், ஆகர்ஷத்பி: - இழுக்கிற, பஹுபி: - அனேகங்களான, அபராதை: - குற்றங்களினால், அதாவது 'பாப: ப்ரஜ்ஞாம் நாஶயதி க்ரியமாணம் புந: புந: | நஷ்டப்ரஜ்ஞ: பாபமேவ புநராரபதே நர: ||' என்கிறபடியே ஒரு அபசாரம் செய்தோமேயானால் அந்தப் பாபத்தின் பலனாக ஜ்ஞான ஸங்கோசம் உண்டாகி அத்தால் இன்னும் மேலே பாபங்களைப் பண்ணும்படி செய்கிறது என்றபடி, இப்படிப்பட்டவைகளினால், விஹிதயா - செய்யப்பட்ட, பராவ்ருத்த்யா - திரும்புவதினால், அதாவது பகவானைவிட்டுத் திரும்பிப் போவதனால் என்றபடி, நித்யம் - எப்பொழுதும், பவஜலதிபங்கே - ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தில் இருக்கும் சேற்றில், நிபததாம் - விழுந்துகொண்டிருக்கிற நமக்கு, பகவதநுகம்பைகவிஷயா - பகவானுடைய க்ருபை

ஶ்ரீமாந் வேங்கடநாதார்ய: த்ரய்யந்தகுரு:
ஸ்வபாவசித்ரமிதம் |
வ்யதநோத் நவபர்வாட்யம்
ஸாங்கம் பரமபதஸோபாநமந்தஸ்ஸ்வபாவபடு ||

இதி கவிதார்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஶ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஶ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஶ்ரீ பரமபதஸோபாநே
|| நவமம் ப்ராப்திபர்வ ||

|| ஶ்ரீ பரமபதஸோபாநம் ஸம்பூர்ணம் ||

கவிதார்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே |
ஶ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்தகுரவே நம: ||

ஒன்றையே ஸ்வரூபமாக உடைய, ப்ரதிம்நா - மஹிமையினால், ஸம்பூர்ணா - நிறைந்திருக்கிற, அதாவது பகவானுடைய க்ருபையே இதற்குப் பலத்தைக் கொடுப்பதாகையினால் இது ஒருநாளும் அழியாதது என்றபடி, இயம் - இந்த, ப்ரதீசீ - (மேற்கு முகமாய்ப் போகிற) ஸம்ஸார மார்க்கத்திற்கு விரோதமான வழியில் போகிற, பரமபதஸோபாநபதவீ - ஸ்ரீ பரமபத ஸோபானத்தின் மார்க்கம், த்ருஷ்டா - பார்க்கப்பட்டது, ப்ரமாணங்களினால் அறியப்பட்டது என்றபடி.

இப்படி ஶ்ருதி முதலிய ப்ரமாணங்களினால் அறியப்பட்ட இந்த மார்க்கத்தைத் தாம் அந்த ப்ரமாணங்களைக்கொண்டு அறிந்ததாக நிரூபித்து ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்—'ஶ்ரீமாந் வேங்கடநாதார்ய:' என்றாரம்பித்து.

[ப - ரை.] த்ரய்யந்தகுரு: - ஸ்ரீமத் வேதாந்தாசார்யர் என்கிற திருநாமத்தை உடையவரான, ஶ்ரீமாந் வேங்கடநாதார்ய: - ஸ்ரீமானாகிய வேங்கடநாதன் என்னும் இந்த ஆசார்யன், இதம் - இந்த, ஸ்வபாவசித்ரம் - ஸ்வபாவத்திலேயே விசித்ரமான, அந்த:ஸ்வ - தம்முடைய, பாவ - திருவுள்ளத்தில் எழுதப்பட்ட, சித்ரம் - சித்ரமாகிய, அதாவது ப்ரமாணங்களைக்கொண்டு நிரூபித்துத் தம்முடைய திருவுள்ளத்தில் ஏற்பட்ட அர்த்தங்களையே இந்த க்ரந்தத்தில் நிரூபித்தருளினார் என்றபடி, ஸாங்கம் - உறுதியாயிருக்கிற, நவபர்வாட்யம் - ஒன்பது படிகளை உடையதான, பரமப

𑌪𑌰𑌮𑌪𑌦𑌸𑍋𑌪𑌾𑌨𑌂 - பரமபதமாகிற மெத்தைக்குப் படியை, 𑌵𑍍𑌯𑌧𑌾𑌤 - செய்தருளினர், அதாவது இது படியென்றது எல்லோரும் பார்க்கக்கூடிய கட்டடமாக வன்றிக்கே ப்ரமாணங்களில் பரமபதத்தை அடைவதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டிருக்கும் விவேகம் முதலிய அர்த்தங்களையே தம்முடைய திருவுள்ளத்தில் படிகளாக அத்யவஸித்து இக்ரந்தம் அருளிச்செய்யப்பட்டது என்று திருவுள்ளம்.

இப்படி திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்

பகவத்விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ உ.ப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீ பரமபத ஸோபாந வ்யாக்யானத்தில்

ஒன்பதாவது ப்ராப்தி பர்வம் முற்றிற்று.

ஸ்ரீபரமபத ஸோபாந வ்யாக்யானம் முற்றிற்று.

ஆனைக்காப்பக ... சென்னை-600 005.
18762

ராவ் ஸாஹிப் டில்லி ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி பண்டின் உபந்யாஸங்கள்.

தில்லியம்பூர் ஸ்ரீ. உப. வே. வேங்கடாசார்யர் ஸ்வாமி சென்ற வைகாசியில் பின்வருமாறு உபந்யாஸங்களைச் செய்தார்.

வைகாசியில்	7௳.	பன்ருட்டி —	வர்ணாச்ரம தர்மம்.
,,	8௳	,,	ஸீதா கல்யாணம்.
,,	6௳	,,	வாலிராகவ ஸம்வாதம்.
,,	11௳, 12௳	தில்லியம்பூர்-	விச்வாமித்ர சரித்ரம், பசுயஜ்ஞம்.
,,	13௳, 17௳	,,	நரஸிம்ஹஜயந்தீ, ஸ்திரீகளின் விவாஹம்.

ஸ்ரீ. உப. வே. காடந்தேத்தி கோபாலாசார்யர் ஸ்வாமி கல்யாணபுரம், புது அக்ரஹாரம், தில்லஸ்தானம், ராயம்பெட்டை இந்த நான்கு ஊர்களில் இந்த ஆனியில் எழுந்தருளி பன்னிரண்டு உபந்யாஸங்களைச் செய்தார்.

அறிவிப்பு.

ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் அருளிச்செய்த ஸ்ரீரகுவீரகத்யம் என்னும் க்ரந்தத்தை ஒரு நூதன வ்யாக்யானத்துடன் தெலுங்கு லிபியில் அச்சிட உத்தேசித்திருக்கிறது. உயர்ந்த கடுதாசியில் ஸுமார் 45 பாரம் அடங்கக்கூடியதாயுமிருக்கும். முன்னதாக 2 ரூபாய் அனுப்புகிறவர்களுக்கு புஸ்தகம் அச்சிட்டு தபால் சார்ஜில்லாமல் அனுப்பப்படும். புஸ்தகம் அச்சிட்டபிறகு வாங்குகிறவர்களுக்கு ரூ. 3—0—0 க்குக் கொடுக்கப்படும். ஆகையால் ஆஸ்தை உள்ளவர்கள் முன்னதாகவே பணத்தை அனுப்பலாம். பணத்தை கீழ்க்கண்ட விலாஸத்துக்கு அனுப்பவும்.

சரவணப்பெருமாள் முதலி தெருவு,
புரசைவாக்கம்,
வேப்பேரி போஸ்டு, மதராஸ். } மே. ஸ்ரீரங்கநாத தாதாசார்யர்.

ச்ருதப்ரகாசிகா ஸஹிதம், ஸ்ரீபாஷ்யம் தமிழ்மொழி பெயர்ப்பு.

முதல் ஸஞ்சிகை (லகுஸித்தாந்தம் முடிய)	ரூ.	...	1	4	0
2-வது மஹா பூர்வபக்ஷம் முடிய		...	0	10	0
3-வது ஜிஜ்ஞாஸாதிகரணம்		...	0	12	0
ஸ்ரீ வசநபூஷண ப்ரமாணத்திரட்டு அரும்பத விளக்கம்		...	1	4	0
திருவாய்மொழி ஈட்டின் ப்ரமாணத்திரட்டு முதல் 3-பத்து		...	0	12	0

திருப்புறம்பியம் போஸ்டு,
கும்பகோணம். } T. D. ராமஸ்வாமி நாயுடு.

குறிப்பு.

ஸ்ரீபரமபத ஸோபானம் பைண்டுசெய்வதற்காக, ஸ்ரீ ஆதிவன் சடகோப மஹாதேசிகன் ஜீவனசரிதமும், அவருடைய படமும், அடுத்த ஸஞ்சிகையில் அனுப்பப்படும்.

ஆகஸ்டுமீ த்திய பஞ்சாங்கம்.

ஆகஸ்டுமீ	4உ,	ஆடிமீ	20, புதன், ஏகாதசி 23-59, ம்ருகசீர்ஷம் 53-35 ஏகாதசி.
,,	8உ,	,,	24, ஞாயர், அமாவாஸை 33-29, பூசம் 5-51, அமாவாஸ்யை தர்ப்பணம், ஆயில்யம் நக்ஷத்ரம்.
,,	11உ,	,,	27, புதன், த்ருதியை 47-50, பூரம் 24-34, திரு ஆடிப்பூரம்.
,,	16உ,	,,	32, திங்கள், அஷ்டமி 59-38, விசாகம் 45-40, ஆவணிமீப் பிறப்பு - தர்ப்பணம்.
,,	19உ,	ஆவணிமீ	3, வியாழன், ஏகாதசி 52-24, மூலம் 44-40, ஏகாதசி.
,,	22உ,	,,	6, ஞாயர், சதுர்தசி 37-25, திருவோணம் 35-40, ருக் உபாகர்மம்.
,,	23உ,	,,	7, திங்கள், பௌர்ணமி 31-32, அவிட்டம் 31-45, யஜுர் உபாகர்மம்.
	24உ,	,,	8, செவ்வாய், ப்ரதமை 25-28, சதயம் 27-89, காயத்ரீ ஜபம்.
,,	30உ,	,,	14, திங்கள், அஷ்டமி 54-33, கார்த்திகை 10-50, முனித்ரய ஸ்ரீ ஜயந்தி, ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை திருநக்ஷத்ரம்.
,,	31உ,	,,	15, செவ்வாய், நவமி 53-55, ரோஹிணி 11-2, பாஞ்சராத்ர ஸ்ரீ ஜயந்தி.
ஸப்டம்பர்மீ	2உ,	,,	17, வியாழன், ஏகாதசி 56-21, திருவாதிரை 15-6, ஏகாதசி.

வேதபாராயண ஸபை, மைலாப்பூர்.

சென்ற ஆனிமீ 14உ திங்கள் கிழமை ஸாயம் ஏழு மணிக்கு மேஷ ஸபையின் ஆதரவின்கீழ் "அதிகரணஸாராவளீ" என்னும் விஷயம் கோஷ்டீபுரம் ஸ்ரீ. உ.ப. வே. ஸௌம்ய நாராயணாசார்யர் ஸ்வாமியால் ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் உபந்யஸிக்கப்பட்டது. ஸ்ரீ. உ.ப. வே. கனம். ஜஸ்டிஸ் வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், ஸ்ரீ. உ.ப. வே. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார் இன்னும் அநேகம்ஸ்வாமிகளும் எழுந்தருளி ச்ரவணாநந்தம் செய்தார்கள்.

ஸ்ரீ ஸ்வாமி இந்த ஸபையார் இவ்விதம் ஸ்ரீதேசிகன் ஜன்ம நக்ஷத்ரத்தன்று அவருடைய ஒவ்வொரு திவ்ய ஸூக்தியையுங்கொண்டு உபந்யாஸம் செய்யச்சொல்லி உத்ஸவம் கொண்டாடுவது மிகவும் ச்லாக்யமென்றும், ஸ்ரீ பாஷ்யகாரரால் அனுக்ரஹிக்கப்பட்ட ஸ்ரீ பாஷ்யம் வெகு விஸ்தாரமாகவும் கத்யரசனையிலிருப்பதால் மனஸில் நிலைநிறுத்துவது ச்ரமமாக இருப்பதால் அதன்பொருட்டு ச்லோக ரூபமாய் அதிகரணஸாராவளீ என்னும் க்ரந்தத்தை ஸ்ரீதேசிகன் அருளிச்செய்ததாக ஸாதித்து, இந்த க்ரந்தம் பக்தியோகநிஷ்டர்களுக்கும் ப்ரபத்தியை அநுஷ்டிக்கிறவர்களுக்கும் அவச்யம் உபாதேயம் என்று நிரூபித்து உபந்யாஸத்தை முடித்தார்.